මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
ANNUAL REPORT
- 2020 -







ශ්‍රම වාසනා අරමුදල
சிரம வாசனா நிதியம்
SHRAMA VASANA FUND

ஆண்டறிக்கை - 2020

தொகுப்பு:
சிரம வாசனா நிதியம்

வெளியீடு:
சிரம வாசனா நிதியத்தின் வெளியீட்டுக் குழு

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை
2020



ஆண்டறிக்கை
2020

சிரம வாசனா நிதியம்

பொருளடக்கம்

நிறுவனம் பற்றிய தகவல்கள்

01. சிரம வாசனா நிதியமும் நிதியத்தின் குறிக்கோள்களும்	01
02. தொலைநோக்கு மற்றும் செயற்பணி	02
03. அடிப்படை மதிப்புகள் மற்றும் விழுமியங்கள்	02
04. நிதியத்தின் அகப் பணியிடச் சூழல்	03
05. நிதியத்தின் வளங்கள்	03
06. 'சுவோட்' பகுப்பாய்வு	04-06
07. எதிர்காலச் சவால்கள் மற்றும் பொறுப்புகள்	06-07
08. நிருவாகக் கட்டமைப்பு	07-08
09. நிறுவகக் கட்டமைப்பு	09
10. உப குழுக்கள்	10-11
11. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் முடிபுகள்	12-16
12. சிரம வாசனா நிதியத்தின் வளர்ச்சியும், லொத்தர் வருமானமும்	17-20
13. நிதிச் செயலாற்றுகை மீளாய்வு	21-24
14. சிறப்பம்சங்கள் 1998 - 2020	25-26
15. நிதிச் செயலாற்றுகை - 2020	27-31

நிதிசார் தகவல்கள்

16. நிதி நிலைமைக் கூற்று	32
17. நிதிச் செயலாற்றுகைக் கூற்று	33
18. நிதி மாற்றங்களின் கூற்று	33
19. பண ஓட்டக் கூற்று	34
20. கணக்குக் குறிப்புகள்	35-40
21. கணக்கீட்டு கொள்கை	41-45
22. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	46-52
23. பணிப்பாளர்கள் சபையின் மீளாய்வு	53-55
பின்னிணைப்பு	56

சிரம வாசனா நிதியம்

சிரம வாசனா நிதியமானது, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் பணியாளர்களின் சேமநலனுக்காக 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகும். சிரம வாசனா நிதியமானது, ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே 07 பரந்த குறிக்கோள்களின் கீழ் பல்வேறு சேமநல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி யுள்ளதுடன், அதன் மூலம் இலங்கை பணியாளர்களைத் தரமுயர்த்தும் நோக்கில் ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிரம வாசனா நிதியத்திற்குரிய பிரதான நிதியிடல் வளமானது தேசிய லொத்தர் சபையினால் வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமையில் இழுக்கப்படுகின்ற 'ஜாதிக சம்பத' லொத்தரினால் ஏற்படுத்தப்படுகின்றது. நிதியத்தின் வருவாய் நிலைமையின்படி, இந்த வருவாயானது, லொத்தர் விற்பனை மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை ஆண்டடிப்படையில் அதிகரிக்கும் என்று தீர்மானிக்கப்படுகின்றது.

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்கள்

01 பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துதல்.

02 பணிபுரிகின்ற தாபனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகையில் அத்தகைய தாபனங்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

03 அவசர நிலைமையின்போது பணியாளர்களுக்கு மருத்துவ மற்றும் ஏனைய உதவி களை வழங்குதல்.

04 பணியாளர்களுக்கெதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றபோது தற்காலிக உதவிகளை வழங்குதல்.

05 அனர்த்தங்களின்போது பணியாளர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்போர்களுக்கும் நிதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல்.

06 பணியாளர்களின் சேமநலனுக்காக சிறந்த சேவைகளை வழங்குபவர்களைக் கௌரவித்தல்.

07 பணியாளரொருவரின் தொழில் முடிவுறுத்தப்படுதல் அல்லது தொழிற்றுறைப் பிணக்கு தொடர்பாக, நடவடிக்கைமுறைகள், தொழில் ஆணையாளர் அதிபதியின், நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் அல்லது கைத்தொழில் நீதிமன்றத்தின் அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தின் முன் ஏதேனும் எழுத்து மூலமான சட்ட ஏற்பாடுகளின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்ற அல்லது நிலுவையிலிருக்கின்றவிடத்து, சட்ட உதவியைப் பெறுவதற்கு பணியாளருக்கு நிதி நிவாரணம் வழங்கப்படுகின்றது.

தொலைநோக்கு மற்றும் செயற்பணி

தொலைநோக்கு

"திருப்திமிகு இலங்கை தொழிலணி"

செயற்பணி

"இடைவெளிகளைக் கவனமாக மதிப்பிட்டு அவற்றை நிரப்புவதன் மூலம், நலன்புரி மிக்க, நிவாரணத்துடன் உதவியளிக்கப்பட்டுள்ள பணிச்சூழலொன்றை உருவாக்குவதனை இலகுபடுத்துதல"

அடிப்படை மதிப்புகள் மற்றும் விழுமியங்கள்

- சிரம வாசனா நிதியத்திடமிருந்து பயனடைகின்ற சேவை நாடுநர்களுக்கு பயனுறுதிவாய்ந்ததும், வினைத்திறன் மிக்கதுமான சேவையை வழங்கும் நோக்கில் முறையான அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்துதல்.

- சேவை நாடுநர்களுக்கு சேவையை வழங்குகின்ற அதே வேளை, சிரம வாசனா நிதியத்தின் ஒழுங்குகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முறைமையியல்களுக்கு அமைவாக உயரிய தரமான சேவையை வழங்குதல்.

- சிரம வாசனா நிதியத்தால் வழங்கப்பட்டுள்ள சேவைகள் தொடர்பாக சேவைநாடுநர்களுக்கிடையில் சிறந்தமுறையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

சிரம வாசனா நிதியத்தின் பணியிடச் சூழல்

சிரம வாசனா நிதியத்தின் அலுவலகமானது, கொழும்பு 05இ ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகக் கட்டடத்தில் 2 ஆவது தளத்தில் அமைந்துள்ளது. இதன் தரைப்பகுதி 1500 சதுர அடி மட்டுமேயாகும். இந்த அலுவலகம் வாகனம் மூலம் எளிதில் அணுகக்கூடியதொன்றாகும். ஆனால், பிரதான பேரூந்து போக்குவரத்துப் பாதையில் அமைந்திருக்காமையால் சில சேவைநாடுநர்களுக்கு இது சிரமமாக இருக்கக்கூடும். தற்போது காணப்படுகின்ற இடவசதி தற்போதிருக்கின்ற பதவியினருக்கு போதுமானதாகும், ஆனால், களஞ்சியத்திற்கு இடவசதி போதுமானதல்ல.

சிரம வாசனா நிதியத்தின் வளங்கள்

மனித வளங்கள

பொது முகாமையாளர், முகாமையாளர், கணக்காளர், உதவி முகாமையாளர், எட்டு முகாமைத்துவ உதவியாளர்கள், இரண்டு அலுவலக உதவியாளர்கள் மற்றும் இரண்டு சாரதிகள்.

உபகரணங்கள்

பதினாறு இருக்கைகளைக் கொண்ட வான், ஒரு மோட்டார் கார், பதின்மூன்று கணினிகள், மூன்று தொலைக்காட்சிப்பெட்டிகள் மூன்று கருப்பு, வெள்ளை அச்சுப்பொறிகள், ஒரு வர்ண அச்சுப்பொறி, ஐந்து காற்றுச் சீராக்கி இயந்திரங்கள், ஒரு கமரா, ஒரு குரல் பதிவு இயந்திரம் மற்றும் கைவிரல் ரேகைப் பதிவு இயந்திரமொன்று.

தளபாடங்களும் பொருத்துக்களும

பதின்மூன்று மேசைகள், பதின்மூன்று கதிரைகள், ஒரு சொகுசு இருக்கைத் தொகுதி, ஒரு கேள்விப் பெட்டி, கதிரைகளுடன் கூடிய மாநாட்டு மேசை.

சிரம வாசனா நிதியத்தின் நல்லெண்ணமும் தோற்றப்பாடும்

சிரம வாசனா நிதியத்தால் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும் வேலையாளர்களுக்கும் வேலையாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதற்கும் கணிசமானளவு பங்களிப்புச் செய்துள்ளன. ஆகவே, இதன் ஆரம்பத்திலிருந்தே இதற்கென மதிப்பும், தோற்றப்பாடும் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. இருப்பினும், என்ன செய்யப்பட்டுள்ளது என்பதற்கு என்ன செய்திருக்க முடியும் என்பதற்கும் இடையில் குறிப்பிடத்தக்க இடைவெளியொன்றுள்ளது. சிரம வாசனா நிதியமானது இன்று வரை போதுமானளவு அறியப்பட்டிருக்கவில்லை. “சிரம வாசனா” என்ற பெயர் அரச சேவை நிறுவனம் என்பதையும்விட லொத்தர் ஒன்றாக அதிகளவில் தெரியப்பட்டிருக்கின்றது.

பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய (SWOT-'சுவோட்') பகுப்பாய்வு

வெளிப்புறச் சூழலை கவனமாக பரிசோதிப்பதன் நோக்கம் சிரம வாசனா நிதியத்தைப் பாதிக்கின்ற வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை இனங்காண்பதாகும். ஆகச் சூழலை பரிசோதிப்பதென்பது அதன் பலம் மற்றும் பலவீனங்களை இனங்காண்பதற்காகும். 'சுவோட்' பகுப்பாய்வானது, சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள கட்டமைப்பிற்குள் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களுக்குள் மூலோபாய பணிப்பு, இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைத் தீர்மானிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துகின்றது.

01. பலம்

- நிதியத்தின் கணிசமான அளவும், வளர்ச்சியின் சாத்தியமும் பிரதான வளம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு, சிறந்த முறையில் உருவாக்கப்படுள்ள லொத்தராக இருத்தல்.
- லொத்தர் வருமானம் தவிர்ந்த ஏனைய பல்வேறு செயற்பாடுகள் மூலம், பல்வேறு மூலங்களிலிருந்தும் நிதியை விரிவுபடுத்தும் ஆற்றல்.
- தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் தேசிய லொத்தர்கள் சபை ஆகிய இரண்டு பலமான
- பாராளுமன்றத்தின் சட்டத்தினால் ஆதரிக்கப்படும் வலுவான சட்டக் கட்டமைப்பு.
- முத்தரப்பு அக்கறைதாரர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனுபவம் வாய்ந்த, தகுதிவாய்ந்த உறுப்பினர்களுடன் உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கை பொறுப்பாளர் சபையொன்று காணப்படுதல்.
- தகைமையுள்ள, தகுதிவாய்ந்த பதவியினர் காணப்படுதல்.
- ஐளுழு 9001:2015 தரக் கட்டுப்பாட்டு முறைமையைக் கொண்டிருத்தல்.
- இணையத்தளத்தையும், இணைய அடிப்படையிலான முறைமையையும் கொண்டிருத்தல்.
- வான் ஒன்றையும், மோட்டார் கார் ஒன்றையும் கொண்டிருத்தல்.

02. பலவீனம்

- முழுச் சந்தைக்கும் விநியோகிக்கமுடியாமை, சந்தை மிகப் பெரியதாக இருத்தலும் நிறுவகம் சிறியதாக இருத்தலும், பரவலாக்கப்பட்ட தொழிற் பாட்டிற்கு போதியளவு பதவியினரையும், தேவையான வளங்களையும் கொண்டிருக்காமை.

- சேவைநாடுநர் பற்றிய தெளிவான கருத்தினைக் கொண்டிருக்காமை.

- கடந்த காலத்தில் சேவைநாடுநர் குழாத்தின் மீது பாரிய தாக்கத்தை மேற்கொண்டிருக்காமை.

- நிதியத்தின் சேவைகள் வழங்கப்படுகின்றமை பற்றி சேவை நாடுநர்கள் குழுவினால் அல்லது பொது மக்களால் அறியப்படாமை.

- சிரம வாசனா லொத்தர் விற்பனை தொழிற்பாடுகளை விரிவுபடுத்துமளவிற்கு அதிகரிக்கவில்லை.

- லொத்தர் மூலம் கிடைக்கின்ற வருமானத்திற்கு தற்போது வரிவிதிக்கப்படு கின்றது.

- கிளைகள் இல்லையாகையால், வெளிச் செயற்பாடுகளுக்கு தொழில் திணைக்களத்தில் தங்கியிருக்கவேண்டியிருக்கின்றது.

- செயல்முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன, ஆனால், பல்வேறு காரணங் களுக்காக சில நேரங்களில் செயல்முறைகளைப் பின்பற்ற முடியாத காரணத்தால் இன்னும் பிரச்சினைகள் எடுகின்றன.

03. வாய்ப்புகள்

- சந்தை பெரியது என்பதுடன், கூட்டிணைப்புச் சட்டத்தினால் நிதியத்திற்கு வழங்கப்பட்ட பரந்தளவிலான பணிப்பாணையின்படி விடயப்பரப்பு விரிவடை வதற்கான சாத்தியமுள்ளது.

- மூன்றாம் உலக உழைக்கும் வர்க்கத்திற்கு அவர்களின் நிதி மற்றும் அதன் செயற்பாடுகளை (இது நடுத்தர வருமான வகையை நோக்கி நகர்கின்ற நாட்டுக்கு குறைக்கப்படும் என்ற போதிலும்) அதிகரிப்பதற்கு வழிவகுக்கின்ற அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்கு நிதியளிக்கக்கூடிய அதிக எண்ணிக்கையிலான சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளமை.

- லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்தவர்கள் குறிப்பிட்ட முன்னுரிமை யைப் பெற்றுக்கொள்வதற்கு அனுகூல விண்ணப்பத்துடன் அவற்றைச் சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிப்பதன் மூலம் பயனாளிகளுக்கும், வருமான மூலங்களுக்குமிடையில் (லொத்தர்) தொடர்பினை ஏற்படுத்துவதற் கான சாத்தியமுள்ளது.

04. அச்சுறுத்தல்கள்

- லொத்தர்களிடையே போட்டித்தன்மை நிலவுவதுடன், சந்தையில் அதிகளவிலும் காணப்படுகின்றது.
- நிதியமானது லொத்தருடன் இணைக்கப்பட்டுள்ளமையால், லொத்தர் வருமானத்திற்கு மேலாக மேலதிக நிதியினை ஒதுக்குவதற்கு திறைசேரியை அணுகுவது சிரமமானது.
- தற்போது சிரம வாசனா நிதியத்தின் பிரதிநிதித்துவமின்றி தனித்து தேசிய லொத்தர்கள் சபையின் தற்றுணிபிலேயே லொத்தர் முகாமைத்துவம் தங்கியிருத்தல்.
- சந்தைக்கு புதிய லொத்தர்கள் அறிமுகப்படுத்தப்படுவதனால் தற்போதிருக் கின்ற லொத்தர்களின் வருமானம் வீழ்ச்சியடைதல்.

சவால்களும் பொறுப்புகளும்

அதிகளவிலான லொத்தர்கள் அதிக போட்டித்தன்மையுடய காரணத்தால் சிரம வாசனா நிதியத்திற்கான பிரதான வளமான "ஜாதிக சம்பத" லொத்தர், குறைந்தளவு "போட்டித் தன்மை" உடையதாக வந்திருந்ததுடன், இந்த லொத்தருடன் ஒப்பிடுமிடத்து பல்வேறுபட்ட ஏனைய அத்தகைய லொத்தர்கள் மூலம் வழங்கப்படுகின்ற முதல் பரிசுக்காக வழங்கப்பட்டுள்ள பணப் பெறுமதி அதிகளவாகும். இந்த நிலைமை நிதியத்தின் வளர்ச்சியை பாரியளவில் பாதிப்பதுடன், லொத்தரின் விற்பனையை அதிகரிப்பதற்காக விளம்பரப் படுத்தலையும், சந்தைப்படுத்தல் செயற்பாடுகளையும் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. லொத்தர் சீட்டுக்களை வாடிக்கையாளர்கள் இணையம் மூலம் கொள்வனவு செய்யக்கூடிய இலகுவான முறையொன்றை வடிவமைப்பதற்கான கலந்துரையாடல் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. லொத்தர் வருமானத்தில் மட்டும் தங்கியிருக்காது எதிர் காலத்தில் வெளிநாட்டு உதவி மற்றும் மூலதனத்தின் மீதும் அவதானம் செலுத்தப்படும்.

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம், இந்த ஆண்டு காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டமிடலில் பிரச்சினைகளைக் குறைக்கும் வகையில், விசேடமாக பணியாளர்களில் தங்கியிருப்பவர்களும் பயனாளிகள் என்பதையும், பணியாளர்களின் குடும்பங்களை மேவும் வகையில் நிதியத்தின் வரப்பிரசாதங்களை வழங்குவதற்கான ஆற்றலைக் கொண்டிருந்தமையையும் உறுதிப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமாகத் திருத்தப்பட்டிருந்தது. இந்தத் திருத்தத்தினூடாக, சிரம வாசனா நிதியமானது லொத்தர் விற்பனையை ஊக்குவிப்பதற்கும், அதனை மேம்படுத்துவதற்கும் வலுவளிக்கப்பட்டிருந்தது.

சமூக மற்றும் சூழல்சார் பொறுப்புகள்

முற்காப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் நாடளாவியரீதியில் ஆபத்துள்ள தொழிற்சாலைகளை இனங்காண்பதும் மற்றும் தொழில்சார் விபத்துக்களைக் குறைக்கின்ற அதேவேளையில், தொழிற்சாலைகளில் ∴ நிறுவனங்களில் தொழில்சார் விபத்தில் ஆதரவற்றவர்களாகவுள்ள அல்லது இறந்த பணியாளர்களின் கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இக்காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளாக தொழில்சார் விபத்துக்கள் குறைவடைந்துள்ளதுடன், தொழில்சார் இறப்புக் களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், நிறுவனங்களில் ஆபத்து குறைவடையும் தன்மை வளர்ந்துசெல்லும் போக்கும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

தொற்றா நோய்கள் பற்றிய சுகாதார செயலமர்வினை நடத்துதல் மற்றும் பணியாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்குதல் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பணியாளர்களை ஊக்குவிப்பதன் காரணமாக, அவர்களின் சேவைகளை மிகவும் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு இயலுமாக இருந்திருக்கின்றதுதென்பது தொழில்தருநர் மற்றும் பணியாளர் ஆகிய இருதரப்பினதும் உரிய பின்னூட்டல் மாதிரிகளிலிருந்து தெளிவாகின்றது.

தேசிய மர நடுகை தினத்துடன் இணைந்ததாக "பூகோளம் வெப்பமடைவதை தடுப்பதற்கு மர நடுகையின் முக்கியத்துவம்" பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைக் கப்பட்டிருந்தது.

நிருவாகக் கட்டமைப்பு

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (2019 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்டவாறு) சிரம வாசனா நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த சிரம வாசனா நிதியமானது, நிதி அமைச்சின் கீழ் வருவதுடன், இந்த நிதியம் நிதியத்திற்கு சொந்தமான வரிசை அமைச்சின் செயலாளரினால் தலைமைதாங்கப்படுகின்றது. சிரம வாசனா நிதியச் சட்டத்திற்கமைவாக சிரம வாசனா நிதியத்துடன் தொடர்புபட்ட நிதியினை நிருவகிக்கின்ற முழுமையான பொறுப்பும் சிரம வாசனா நிதியப் பணிப்பாளர் சபைக்கு உரித்தளிக்கப் பட்டுள்ளதுடன், இதன் நிதி முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புபட்டுள்ள அனைத்து விடயங்களும் பணிப்பாளர் சபைக்கே உரித்தளிக்கப்பட்டுள்ளன.


2020 ஆம் ஆண்டில் சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர்கள் சபை

பெயர்	பதவி
திரு.ஜுட் நிலுக்ஷன	தவிசாளர்
திரு.பீ.கே.பிரபாத் சந்திரகீர்த்தி	அங்கத்தவர்
திருவதி.பீ.சி.பீ..திலகரத்ன	அங்கத்தவர்
திருவதி.வை.கே.சிரோமி ஜீவமாலா	அங்கத்தவர்
திரு.லிலித் கன்னன்கர	அங்கத்தவர்
திரு.சுதானந்த பண்டார	அங்கத்தவர்
திருவதி.பி.டி.எம்.எஸ்.கமகே	அங்கத்தவர்
திரு.பீ.ஆர்.சி.குணவர்தன	அங்கத்தவர்

2020.12.31 இல் பதவியணி பற்றிய விபரம்

சிரேஷ்ட மட்டம்		**உயர் மட்டம்**		**இரண்டாம் மட்டம்**		**ஆரம்ப மட்டம்**		**மொத்தம்**		
ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நிற்போதிருக்கின்ற பதவயணி	ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நிற்போதிருக்கின்ற பதவயணி	ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நிற்போதிருக்கின்ற பதவயணி	ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நிற்போதிருக்கின்ற பதவயணி	ஆங்கீகரிக்கப்பட்ட பதவியணி	நிற்போதிருக்கின்ற பதவயணி	வெற்றிடங்கள்
01	01	04	03	08	08	04	04	17	16	01

நிறுவகக் கட்டமைப்பு - 31.12.2020



உப குழுக்கள்

சிரம வாசனா நிதியத்தில் தாபிக்கப்பட்ட உப குழுக்கள்

01. அகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு
02. வரப்பிரசாத விடயத்துக்கான குழு
03. முன்னேற்ற மீளாய்வுக் குழு

அகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

சிரமவாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு சுதந்திரமான பிரிவொன்றாகும். இக்குழு பணிப்பாளர்கள் சபையின் இரண்டு உறுப்பினர்கள், திறைசேரியின் பிரதிநிதியொருவர், அவதானிப்பாளராக கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியொருவர், தொழில் அமைச்சின் பிரதம நிதி அலுவலர் மற்றும் சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளர் மற்றும் கணக்காளர் ஆகியோரைக் கொண்டிருக்கின்றது.

இந்த குழுவின் பிரதான குறிக்கோள், நிதியத்தின் நிறுவனம்சார் நிருவாகம், சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்களினது அடிப்படையில் பயனுறுதியையும், ஆக்கத் திறனையும் ஊக்குவித்தல், கூட்டுத்திட்டம் மற்றும் செயற்றிட்டத்தின் வகைப்பாடு ∴ பரிந்துரைகள், கணக்கீட்டுச் செயற்பாடுகளை நடத்துவதில் நிதிக் கூற்றுக்களில் நம்பகத்தன்மையை அறிக்கையிடுவதனைப் பாதிக்கின்ற ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல், மோசடிகள், குறைபாடுகளைத் தடுத்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற அத்தகைய தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துதல் போன்ற அத்தகைய பணி இலக்குகள் பற்றி தேவையான ஆலோசனையை வழங்குவதாகும்.

அகக் கணக்காய்வுக் குழுவின் தலைவர் / தவிசாளர், நிதியத்தின் தவிசாளருக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன், இந்த கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

சிரம வாசனா நிதியத்தின் கணக்காய்வுக் குழு 2020 பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது.

பெயர்	பதவி
திருவதி.பீ.சி.பீ..திலகரத்ன	திறைசேரி முகவர் / குழு தவிசாளர்
திரு.சுசானந்த பண்டார	குழு அங்கத்தவர
திரு.லிலித் கன்னன்கர	குழு அங்கத்தவர

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அடிப்படைத் தொழிற்பாடுகள

01. கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் செயல்முறையினைச் செம்மைப்படுத்துவதற்கு சிரம வாசனா நிதியத்தின் தற்போதிருக்கின்ற கணக்குகளை மீளாய்தலும் மதிப்பிடுதலும்.

02. நிதியத்தின் முன் தீர்மானிக்கப்பட்ட குறிக்கோள்களை அடையும் நோக்கில் எழக்கூடிய ஏதேனும் பிரச்சனையின் தாக்கத்தை ஆராய்தல்.

03. விசேடமாக, சொத்துக்கள் சேதமடைவதிலிருந்து, மோசடியிலிருந்து பாதுகாப்பாக உள்ளதா என்பது பற்றி அறிந்திருத்தல்.

04. கொடுக்கல் வாங்கல்களின் அவசியம் பற்றியும், நன்மைகள் பற்றியும் ஆராய்தல், இலாப, நட்ட அறிக்கைகள் மற்றும் வீணான, வழமைக்கு மாறான மேலதிக செலவீனம், சொத்துக்களை அகற்றுதல் காரணமாக உறப்பட்ட செலவு கழிப்பனவுகள் பற்றி ஆராய்தல்.

05. கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கும், கணக்காய்வுத் தீர்மானங்களை வகுத்தமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரிவுகளின் தலைவர்களுக்கிடையில் விநியோகித்தலும்.

06. கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

07. நிதியத்தின் தவிசாளரின் அல்லது பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் விசேட விசாரணைகளை நடத்துதல்.

08. நிதியத்தின் தவிசாளரால் / பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்களால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்களுக்கு உதவி செய்தலும், பரிந்துரைகளைச் செய்தலும்.

வரப்பிரசாத விடயத்துக்கான குழு

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோளின்படி, புலமைப்பரிசில்களை வழங்குதல், மருத்துவ உதவிகளை வழங்குதல் மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பணிப்பாளர்கள் அதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வகைப்பாட்டின் அடிப்படையில் குழுவினூடாக பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

வரப்பிரசாத விடயத்துக்கான குழுவானது, நிதியத்தின் பொது முகாமையாளர், வரிசை அமைச்சின் சட்டப் பிரிவு அலுவலர் மற்றும் தொழில்சார் மருத்துவர் ஆகியோரைக் கொண்டிருக்கின்றது. இக் குழு சரியான முறையில் பயளாளிகளைத் தெரிவுசெய்வதற்கு உதவுகின்றது.

முன்னேற்ற மீளாய்வுக் குழு

காலத்திற்குக் காலம் கணக்காய்வு ஆலோசனையின் பேரில் சிரம வாசனா நிதியத்தின் கௌரவ பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் குழுவொன்று உருவாக்கப்படுகின்றது. சிரம வாசனா நிதியத்தின் நாளாந்த கடமைகளை ஆற்றுவது இதன் பிரதான தொழிற் பாடாகும். இக்குழு, நிதியத்தின் முகாமையாளர், கணக்காளர், மற்றும் உதவி முகாமை யாளர் ஆகியோரைக் கொண்டிருக்கின்றது என்பதுடன், குறிப்பாக இக்குழு நாளாந்த செயற்பாடுகளைப் பரிசோதிப்பதுடன், நிறைவுசெய்யப்பட்ட கோப்புகளை மற்றும் திட்ட மிடப்பட்ட வேலையையும் உண்மையான நிலைமையும் தயாரித்தல் அத்துடன் பிழைகள், குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குகின்றது. இக்குழு, நிதியத்தின் கோப்புகளை எந்தக் குறைபாடுகளுமின்றி பேணுவதற்கு உதவியுள்ளதுடன், நிகழ்ச்சித்திட்டங்களை முறையாக நடத்தியுமுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்களும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிபுகளும

முதலாவது காலாண்டுடன் தொடர்புபட்டுள்ள விடயங்கள், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிபுகளும்.

தொ. இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	எடுக்கப்பட்ட நடவடிக்கை
2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள்			
01	லொத்தர் வருமானம்	லொத்தர் சபையானது, லொத்தர் வருமானத் திலிருந்து 10மூ இனை சிரம வாசனா நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது என்றும், இது தொடர்பில் சட்ட அடிப்படை எதுவுமில்லை யென்று பொது முகாமையாளர் தெவித் துள்ளார். பணிப்பாளர்கள் சபையின் உறுப்பின ரொருவாக அவர் இருப்பாராயின், இது தொடர்பில் லொத்தர் சபையின் பொது முகாமையாளருடன் எதிர்காலத்தில் கலந்துரையாட முடியுமென்று பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	லொத்தர் சபையின் பொது முகாமையாளர், பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். இதுவரை, லொத்தரின் வருமானத்தை அதிகரிப்பதற்காக வாரமொன்றுக்கு 2 தடவைகள் சீட்டிழுப்பு செய்யப்படுகின்றது.
02	நிதிக் கூற்றுக்கள	கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கும் வரை நிதிக்கூற்றுக்கள் மாற்றத்திற்கமைவானவை யென்பதால், அவை தேவையென்றால் மேலும் திருத்தப்படலாம் என்று பிரதம நிதி அலுவலர் தெரிவித்திருந்தார்.	உரிய திகதியில் கணக் காய்வாளர் அதிபதிக்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக் கப்பட்டுள்ளன.

03	அகக் கணக் காய்வுத் திட்டம் 2020	சிரம வாசனா நிதிய அகக் கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அகக் கணக்காய்வுத் திட்டம் 2020 கலந்துரையாடப்பட்டிருந்தது. கணக்காய்வு, அகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப் படுதல் வேண்டுமென்று திறைசேரியின் பிரதிநிதி தெரிவித்திருந்தார்.	கணக்காய்வாளர், சிரம வாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வுத் திட்டத்தில் கணக்காய் வினை உள்ளடக்கியுள்ள துடன், அது ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.
04	பொருத்தமான அபிவிருத்தி திட்டம்	அமைச்சின் பிரதம அகக் கணக்காய்வாளர், ஸ்திரத்தன்மை கோட்பாட்டு திட்டம், மனித வள அபிவிருத்தித் திட்டம், தகவல் சட்டம்,பிரசைகள் பட்டயம் ஆகியவை பற்றிய உரிய சுற்றறிக்கைகள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது சிரம வாசனா நிதியத்திற்குப் பிரயோகிக்கப்படக்கூடியதென்றால் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.	ஸ்திரத்தன்மை கோட்பாட்டு திட்டம், மனித வள அபிவிருத்தித் திட்டம், தகவல் சட்டம்,பிரசைகள் பட்டயம் ஆகியவை ஏற்கனவே தயாரிப்பட்டுள்ளது.

இரண்டாவது காலாண்டுடன் தொடர்புபட்டுள்ள விடயங்கள், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிபுகளும்.

தொ. இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	எடுக்கப்பட்ட நடவடிக்கை
01	2019 ஆம் ஆண்டுக் கான செயற்றிட்டம	இந்த ஆண்டுக்கான செயற்றிட்டத்தை மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கும், பெறப்பட்டுள்ள வருவாயின்படி மாற்றி நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.	தற்போதைய கொரோனா தொற்று நோய் பரவல் காரணமாக நிதி வருவாயினடிப்படையில் எதிர்கால நிதியிடல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
02	புலமைப் பரிசில் நி-கழ்ச்சித்திட்டம்	இந்த ஆண்டுக்காக 100 புலமைப்பரிசில்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், முதலாவது கட்டத்தின் கீழ் 50 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு திட்டமிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்தப் புலமைப்பரிசில்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன.

03	சிரம வாசன நிதியத்தின் செயற்றிட்டம்	நாளதுவரைப்படுத்தப்பட்ட செயற்றிட்டம் அங்கீகாரத்துக்காக பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.	செயற்றிட்டம் நாளதுவரைப்படுத் தப்பட்டு பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, இதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது.
04	லொத்தர் உடன் படிக்கை	லொத்தர் வருமானத்திலிருந்து 10மூ பெறப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கான உடன்படிக்கையொன்று சட்டத்திற் கமைவாக இருத்தலும் வேண்டுமென்று கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித் துள்ளார். உடன்படிக்கை திறைசேரியுடன் கைச்சாத்திடப்படுதல் வேண்டுமென்று லொத்தா சபை தெரிவித்துள்ளது. இது பிரச்சினையொன்றாகுமென்று கணக்காய்வு அத்தியேட்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.	இது தொடர்பாக திறைசேரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், நினைவூட்டல் கட்டிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.
05	நடைமுறைப் படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான ஆவணங் களை நாளதுவரைப் படுத்தல்	நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் செலவினம் தொடர்பான ஆவணங்கள் அதேநேரத்தில் இற்றைப் படுத்தப்படவில்லையா என்று கணக்காய்வு அத்தியேட்சகர் வினவியிருந்தார். இந்த நோக்கத்திற்காக முன்னேற்ற மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதனது பரிந்துரைகளுக்கமைவாக செயற்பட வுள்ளதாகவும் பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	புதவியினரின் அவதானத்திற்கு இதனைக் கொண்டுவருவதற்கான பொறிமுறையொன்றினை முன்னேற்ற மீளாய்வுக் குழு உருவாக்கியுள்ளது.
06	கணக்கெடுப்பு சபையின் செயற்றிட்டம் மற்றும் பெறுகைத் திட்டம்	கணக்கெடுப்பு சபையின் செயற்றிட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தை நாளதுவரைப்படுத் துவது பற்றி பிரதம நிதி அலுவலகர் வினவியிருந்தார்.	கணக்கெடுப்பு சபையின் செயற்றிட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் ஆகியன நாளதுவரைப் படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாவது காலாண்டுடன் தொடர்புபட்டுள்ள விடயங்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் கலந்துரையாடப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிபுகளும்.

தொ. இல.	கலந்துரையாடப்பட்ட விடயம்	முடிபு	எடுக்கப்பட்ட நடவடிக்கை
01	சிரம வாசனா நிதியச் சட்டம்	சிரம வாசனா நிதியமானது, 2020.08.09 ஆம் திகதியிடப்பட்ட 2187.̇.27 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக் கமைவாக, தொழில் அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப் படவுள்ள ஒழுங்கு விதிகளின் கீழ் குறித் துரைக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிவித்துள்ளது. ஆகவே, எதிர்காலத்தில் எழவுள்ள பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நிறுவனம் உதவும் வகையில் எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்பது பற்றி எழுத்து மூலமான ஆலோசனையைப் பெறுமாறு கணக்காய்வு அத்தியேட்சகர் தெரிவித் திருந்தார். இது தொடர்பில் நிதி அமைச்சிடமிருந்து எழுத்து மூலமான விளக்கத்தை பெறுமாறு குழு கேட்டிருந்தது	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தல்களின்படி, நிதி அமைச்சிடமிருந்தான தெளிவு படுத்தலை கேட்டுள்ளதுடன், நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளது.
02	அகக் கணக்காய்வு அறிக்கைகள்	சிரம வாசனா நிதியத்தின் அகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு வினாக்கள் எழுப்பப்பட்டுள்ளனவா என்று குழு வினாவியுள்ளது.அந்த நேரத்தில் நிதியத்துக்கு அகக் கணக்காய்வாள ரொருவர் நியமிக்கப்படவில்லையென்று பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	அகக் கணக்காய்வாள ரொருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

03	2019 ஆம் ஆண்டுக்கான கணக்காய் வாளர் அதிபதியின் அறிக்கை- பின்னூட்ட லைப் பெறுதல	சிரம வாசனா நிதியம் நலன்புரி நிறுவனமொன்றாகையால், பயனாளிகளால் முறையாகப் பெறப்பட்டுள்ளதுடன், பின்னூட்டலைப் பெற்றது நிறுவனத்தால் செய்யப்பட்ட பணிஇலக்காக இருந்ததா என்று கணக்காய்வாளர் அதிபதியினால் வினவப்பட்டுள்ளது. சிரம வாசனா நிதியத்தின் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் நிதியத்தின் இணையத்தளத் தினூடாக நாளதுவரைப்படுத்தப்பட்டு, அவர்களது பின்னூட்டலைப் பெறுவதற்கு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் மற்றும் 12 மாதங்களுக்கொருமுறை பயனாளி களுக்கு பின்னூ ட்டல் கையே: அனுப்பப் பட்டு, அவை இணையத்தளத்தில் பதிவிடப் படுகின்றன என்று பொது முகாமையார் தெரிவித் திருந்தார். இணையத்தளத்தினூடாக மூக்குக்கண்ணாடி விநியோ நிகழ்ச்சித் திட்டத்தை உதாரண மாகக் காட்டி இது தொடர்பான விளக்க மொன்று குழுவுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. தகவல் முறைமையைப் பயன்படுத்தி எவ்வாறு நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளவை அடுத்த கூட்டத்தில் முன்னளிக்கையொன்று சமர்ப் பிக்கப்படுமென்று பொது முகாமையாளர் தெரிவித்திருந்தார்.	நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்வதற்கு ஒவ்வொரு 03 மாதங்களுக்கும், 06 மாதங்களுக்கும் மற்றும் 12 மாதங்களுக்கொருமுறை பின்னூட்டலை அனுப்புகின்ற முறைமையொன்று இணையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது.
04	சிரம வாசனா நிதியத்துக்கு கட்டட வசதியைப் பெறுதல்	சிரம வாசனா நிதியத்தை தாபிப்பதற்கு நிதி அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்ட “மெஹெவர பியெச கட்டடத்தின்” தளங்கள் தொடர்பாக நிதி அமைச்சிடம் விசாரிப்பதற்கு பொது முகாமையாளருக்கு குழு அறிவித்திருந்தது.	சிரம வாசனா நிதிய அலுவல கத்திற்கு அதிகளவு இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று கொண்டிருக்கின்றது.

ஆய்வு அறிக்கை (2016-2020)

01. வருமானம்

- 1998 ம் ஆண்டின் 12ம் இலக்க சிரமவாசனா நிதிய சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சிரமவாசன நிதி ஊழியர்களின் நலன்புரி சேவைகளைக்கருதி உருவாக்கப்பட்ட ஓர் நிறுவனமாகும். இந்நிறுவனத்தினால் நடாத்தப்படும் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பிலான சேவைகளிற்கு பிரதானமாக நிதிவழங்கல்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வெற்றிப்பரிசு வழங்கும் ஜாதிக சம்பத அதிஸ்டலாப சீட்டு மூலமாகும்.

- "சிரமவாசன" என்ற பெயரில் சந்தைப்படுத்தப்படும் லொத்தர் 2010ம் ஆண்டில் ஜாதிக சம்பத என பெயர் மாற்றப்பட்டுள்ளது. அதில் 2010ம் ஆண்டின் இறுதியில் 28 மில்லியன் காணப்பட்ட லொத்தராகும். வருமானமானது பல்வேறு செயல்முறைகள் பாவிக்கப்பட்டு படிப்படியாக 2013 ம் ஆண்டின் இறுதியில் 65 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்ளமுடிந்தது.


- 2016ம் ஆண்டில் சிரமவாசனா நிதியத்தினூடாக ஜாதிகசம்பத விசேட பரிசு முறைமை நடாத்தப்பட்டது. அதில் 20016ம் ஆண்டு இறுதியில் வருமானம் 63 மில்லியன் வரை அதிகரித்தது.

- 2106ம் ஆண்டில் டிசெம்பர் மாதத்தில் அதிஸ்டலாப சீட்டின் விலை ரூபா 20 இலிருந்து 30 வரை அதிகரித்தது. அது மீண்டும் 2017 ஜனவரி மாதம் ரூபா 30 இலிருந்து 20ஆக குறைக்கப்பட்ட போதும் அதனால் அதிஸ்டலாப சீட்டு விற்பனைக்கு ஏற்பட்ட பாதிப்பை குறைப்பதற்கு சில மாத காலங்கள் எடுத்தது. எனவே 2017ம் ஆண்டின் இறுதியில் வருமானம் 4 மில்லியன் வரை குறைவடைந்தது.

- 2017 இன் இறுதியில் 46 மில்லியன் வரை காணப்பட்ட வருமானம் படிப்படியாக 2018 இல் 51 மில்லியன் வரை அதிகரித்தது. அத்துடன் 2019 ம் ஆண்டு ஈஸ்டர் குண்டு வெடிப்பினை அடுத்து சில மாதங்கள் லொத்தர் வருமானம் குறைவடைந்தது.

- 2019 ஆம் ஆண்டில் சிரமவாசனா சட்டம் திருத்தப்பட்டதுடன் அதில் ஊழியர்களிற்கும் அதேவேளை அவர்களில் தங்கிவாழ்வோர் தொடர்பிலும் மீளளிப்புகள் வழங்க முடிந்ததுடன் சிரமவாசனா லொத்தர் சபையின் பணிப்பாளர் மற்றும் தொழில் ஆணையாளர் நாயகம் ஆகியோரின் உத்தியோகர்வ அதிகாரங்களினால் சிரமவாசனா நிதிய உறுப்பினராக உள்ளமையால் நிதியத்தின் நிலையான தன்மை மேலும் வலுவடைந்தது.

- அவ்வருட இறுதியில் லொத்தர் வருமானம் 60 மில்லியன் வரை அதிகரித்தது. 2020ம் ஆண்டின் பெப்ரவரி மாதம் வரை லொத்தர் வருமானம் அதிகரித்து காணப்பட்டதுடன் அவ் வருட இறுதியில் 30 மில்லியன் வரை குறைவடைந்தது கொரோனா தாக்கத்தினாலாகும்.



வரைபுகள் 01

02. வேலைத்திட்டங்கள்

- 2016ம் ஆண்டில் லொத்தர் வருமானம் 65 மில்லியன் (95மூ) மட்டில் காணப்பட்டதுடன், கண்சிச்சை முகாம், பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் மற்றும் புலமைப்பரிசில் வழங்குதல் போன்றவற்கு கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு நடாத்தப்பட்டது.


- 2017ம் ஆண்டில் லொத்தர் வருமானம் 46 மில்லியன் (79மூ) மட்டில் காணப்பட்டதுடன் நலன்புரி நிகழ்ச்சிகளின் £ழ் முதலீட்டு வலயங்களில் விளையாட்டு வசதிகள் சுகாதார வசதிகள் மேம்படுத்துதல் புலமைப்பரிசில் மாநாடுகள் நடாத்துதல் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் மற்றுமும் வலுவூட்டல் நிகிழ்ச்சிகள் போன்னறன நடாத்துதல் கண் சிகிச்சை மற்றும் நலன்புரி வேலைத்திட்டங்களிற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

- 2018ம் ஆண்டில் லொத்தர் வருமானம் 51 மில்லியன் (81.86மூ) மட்டின் காணப்பட்டதுடன் கண்சிகிச்சை மற்றும் நலன்புரி வேலைத்திட்டங்களின் கீழ் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் புலமைப்பரிசில் மாநாடு நடாத்துதல் போன்றவை செயற்படுத்தப்பட்டது.

- சிரமவாசனா நிதியம் இதுவரை அதிக வேலைத்திட்டங்கள் நடாத்தி பல வருட வருடமாக 2019ம் ஆண்டை கருதமுடியும். அத்துடன் கண்சிகிச்சை, வலுவூட்டல் நிகழ்ச்சிகள் பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் நடமாடும் சேவைகள் நடாத்துதல் மற்றும் புலமைப்பரிசில் மாநாடு போன்றவை நடாத்தப்பட்டுள்ளன.


- 2020ம் ஆண்டின் முதற் காலாண்டில் வலுவூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் அறிவூட்டல் செயற்பாடுகள் சில நடாத்த முடிந்ததுடன் அதற்கு மேலாக கொரோனா நோய்தாக்கம் காரணமாக செயற்திட்டங்கள் நடாத்த முடியாமல் போனது. ஆனாலும் கொரோனா நோய்த்தாக்கம் காரணமாக தொழில் இழந்த பிரிவினருக்கு சட்ட உதவிகள் வழங்கும் செயற்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதற்குமேலதிகமாக உயிரிழப்பு விபத்துக்கள் புலமைப்பரிசு வழங்கல்கல் செயற்பாடுகள் நடாத்டதப்பட்டன.

Awarness Programme
(Rs.)




வரைபுகள் 02

Empowerment Programme
(Rs.)




வரைபுகள் 03

Helth Camp Programme
(Rs.)




வரைபுகள் 04

Legal Aid Programme
(Rs.)




வரைபுகள் 05

Scholarship Programme
(Rs.)



வரைபுகள் 06

Welfare Programme
(Rs.)



வரைபுகள் 07

03. உற்பத்தித்திறன் மற்றும் முன்னேற்றம்.

- சிரமவாசனா நிதியம் 2016ம் ஆண்டில் இணையத்தளத்தினூடாக தகவல் தரவுகள் அத்தியாயம் இன் கீழ் உருவாக்கியுள்ளது. அதன் கீழ் சிரமவாசனா நிதியத்தினூடாக செயற்படுத்தப்படும். நிகழ்ச்சித் திட்டங்களின் தரவுகள் இத்தளத்திற்கு பதிவேற்றம் செய்யப்படும் மேலும் பயனாளிகளின் பின்னூட்டல் செயற்பாடுகள் செய்யவும் அவர்களிற்கான சேவைகள் வழங்கப்பட்டு உள்ளதா என கண்டறியவும் இயலுமாவதுடன் ளுஆஎள ழேவகைஉயவழைஎ சேவையூடாக பயனாளிகள அறிவூட்டல் போன்றவையும் நடாத்தக்கூடிதாயுள்ளதால் மேற்படி செயற்திட்டத்தால் கடதாசி அச்சிடல் குறைக்கப்படுவதோடு குறைந்த காலத்தில் சேவை வழங்கக்கூடியதாகவும் உள்ளமை சாதகமாகின்றது.

- 2016ம் ஆண்டில் ஐளுழு 9001-2015 தரச்சான்றிதழ் தொடர்பில் விண்ணப்பித்து சான்றிதழ் பெறப்பட்டது. அதில் சிரமவாசனா நிதியத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்குரிய விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய காகிதாதிகள் ஒழுங்குபடுத்துதல் மற்றும் அதனூடாக பயனாளிகளிற்காக வழங்கப்படும் சேவைகள் இலகுவாக வழங்கவும் சாதகமானது.

- 2020ம் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் செயலககாரியாலயத்தினால் நடாத்தப்பட்ட உற்பத்தித்திறன் விருதுக்காக விண்ணப்பித்து ஊழஅிடஅைநவெயசல ஊநசவகைகஉயவந தேர்ச்சிக்காக சான்றிதழ்உரித்தானது. அதனால் நிறுவனத்திற்கும் நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் இந்த பலாபலன் உரித்தானது.

04. விளம்பரம் மற்றும் உயர்வுகள்

- சிரமவாசனா நிதியத்திற்கு முக்கியமான வருமான வழியாக தேசிய வள லொத்தர் அமைந்துள்ளது. சிரமவாசனா நிதியம் மற்றும் ஜாதிகசம்பத் லொத்தர் தொடர்பாக விளம்பரம் செய்ய சிரமவாசனா இலட்சனை பொறித்த குடைகள், கையேடுகள் , கீடெக், தொப்பிகள், ரீசேட் போன்றன அச்சிட்டு சிரமவாசனா நிதியத்தினுடாக நடாத்தப்படும் செயலமர்வுகளில் லொத்தர் விற்பனைக்கு ஒத்ததாக பகிர்ந்தளித்தல் 2016, 2017 ம் ஆண்டுகளில் நடைபெற்றது.

- சிரமவாசனா நிதியத்திற்குரிய பயனாளிகள் தெளிவூட்டுமுகமாக 2016, 2017, 2018ம் ஆண்டுகளில பத்திரிகை விளம்பரம் ஊடாக கலந்துரையாடல் என்பவற்றினூடாக விளம்பரப்படுத்தப்பட்டதுடன் தற்போது அவை குயஉந டிழழமஇ லுழர வரடிந போன்ற டிஜிற்றல் தொழிநுட்பங்களினூடாக விளம்பர செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றது. அவ்வாறே குறைந்த செலவீனத்துடன் விளம்பரம் செய்துகொள்ளகூடியதாகவுள்ளது.

- சிரமவாசனா நிதியத்தின் பெயரில் குயஉந டிழழமஇ லுழர வரடிந கணக்குகள் இரண்டு உருவாக்கப்பட்டு அதனூடாக சிரமவாசனா நிதியம் தொடர்பாகவும் அதன் சேவைகள் தொடர்பாகவும் வீடியோ பாடல்கள் மற்றும் காட்சிகள் ஊடாக அறிவூட்டல்கள் செய்யப்படுகின்றமை காலத்திற்கு பொருத்தமாகின்றன.

நிதிச் செயலாற்றுகை மீளாய்வு

சிரம வாசனா நிதியத்திற்கான பங்களிப்புகள்

(அ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பாராளுமன்றத் தினால் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கக்கூடியவாறான பணத்தொகைகள் அனைத்தும்.

(ஆ) உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களின் மானியங்கள், நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற பணத்தொகைகள் அனைத்தும்.

(இ) நிதியம் முதலீடு செய்வதனூடாக வருமானமாகப் பெறப்படுகின்ற பணத்தொகைகள் அனைத்தும்.


(ஈ) சட்டத்தின் 13 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள லொத்தர்களினால் பெறப்பட்ட பணம் உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதில், அதன் பணிகளை ஆற்றுவதில் நிதியத்தால் பெறப்பட்ட அனைத்துப் பணத் தொகைகளும்.

சிரம வாசனா நிதியமானது, தனியார் துறைப் பணியாளர்களை உள்ளடக்கியிருப்பதுடன், சுய தொழிலில் ஈடுபடுபவர்களை உள்ளடக்கவில்லை. சிரம வாசனா நிதியத்தின் நிதி இயலுமையின் அடிப்படையில் வெவ்வேறு எல்லைகளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நிதி இயலுமையை அதிகரிப்பதற்கு இசைவாக, அத்தகைய எல்லைகளுக்கு அப்பால் மேலதிக விரிவுபடுத்தல் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

மொத்தச் செலவினம் (ரூபா)

	2016	2017	2018	2019	2020
நிருவாகச் செலவுகள்	8,952,149	12,609,705	13,931,486	15,849,845	14,731,837
எதிர்பார்க்கப் பட்ட செலவுகள்	30,267,660	30,178,504	28,071,637	32,556,007	8,131,554

அட்டவணை 01




வரைபுகள் 08

மொத்தச் சொத்துக்கள் (ரூபா)

	2016	2017	2018	2019	2020
நடைமுறைச் சொத்து	334,144,880	42,004,816	417,604,915	439,140,324	452,938,752
நடைமுறையல்லா சொத்து	65,336,394	117,741,684	13,836,958	15,937,138	15,110,626

அட்டவணை 02




வரைபுகள் 09

மொத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் (ரூபா)

	2016	2017	2018	2019	2020
மொத்த சொத்து	399,511,275	420,048,160	431,441,874	455,077,472	468,049,378
மொத்தப் பொறுப்பு	1,307,232	8,688,538	2,505,508	2,081,149	2,731,479

அட்டவணை 03



வரைபுகள் 10

சிரம வாசனா நிதியத்தின் சாதனைகள் 1998 - 2020


சிரம வாசனா நிதியமானது 1998 மாச் 31 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்ததுடன், பொது முகாமையாளர் மற்றும் மூன்று பதவியினருடன் முகாமை செய்யப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு வரை நிதியத்தின் பணி மிகவும் குறைந்த வசதிகளுடன் பல சிரமங்களுக்க மத்தியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டிலிருந்து நிதியமானது, சந்தர்ப்பங்களுக்கு முன்னுரிமையளிப்பதிலும் பார்க்க நாடளாவியரீதியில் உள்ளடக்கி நிதியத்தின் சேவையை கையாளும் நோக்கில் அதனது பதவியினரை நிலையாக நாளதுவரைப்படுத்தி, புதிய பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்து, நிதியத்துக்கான வளங்களைக் கொள்வனவுசெய்து, பணியாளர்களுக்கு பயிற்சிகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தி, அவற்றை நாளது வரைப்படுத்தி வந்துள்ளது. சிரம வாசனா நிதியத்தின் லொத்தர் சீட்டினை "ஜாதிக சம்பத சனிக்கிழமை" லொத்தருடன் இணைத்து லொத்தரை விரிவுபடுத்தியமை, லொத்தர் விற்பனையில் அதிகரிப்பு என்ற அதன் குறிக்கோளை அடைந்து நிதியத்தின் விகிதாசாரம் அதிகரித்துள்ளது.

நிதியத்தினையும், அதன் தொழிற்பாடுகளையும் பயனாளிகளை நோக்கி கொண்டு செல்வதற்கு மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் தொழில் பொறியியலாளர் அலுவல கங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளதுடன், நிதியத்தின் பணி பற்றிய பதாதைகள் இலங்கையிலுள்ள அனைத்து தொழில் நியாயசபைகளிலும், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன். இது லொத்தர் விற்பனையில் அதிகரிப்புக்கு இட்டுச்சென்றுள்ளது. நிதியத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப பணியாற்றுகின்ற அதேவேளை அதிக ஆக்கத் திறனுள்ள வகையில் சேவைகளை வழங்கும் குறிக்கோளுடன் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களில் ஒன்றான சிரம வாசனா நிதியத்துக்கு 2016 ஆம் ஆண்டில் முதலாவது ஐளுழு சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

பல பணி இலக்குகளை இலகுவாகவும், விரைவாகவும் ஆக்குவதற்கும், பயனாளிகளுக்கு தேவைப்பட்ட தகவல்களை வழங்குவதற்கும் கூட்டிணைந்த செயற்பாடுகளை விரிவுபடுத்தி, கணினிமயப்படுத்தப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி கணினி முறைமையில் அவர்களது கடமைகளை ஆற்றுவதற்கு அலுவலர்களை இயலச்செய்து சிரம வாசனா நிதியத்தில் கணினி அடிப்படையிலான வேலைச் சூழலொன்று நிறுவப்பட்டுள்ளது. இது, டிஜிற்ரல் பதிவு முறைமையைப் பயன்படுத்தி விரைவாக பயனாளிகளுக்கு தகவல்களையும் வழங்குகின்றது.
எதிர்வரும் ஆண்டில் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றுவதற்கும், நிதியத்தின் தொழிற்பாடுகளை பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் ஆற்றுவதனை இலக்காகக் கொண்டுள்ள எஸ்-5 எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதற்கும் திட்டமிடப்படுகின்றது.

சிரம வசன நிதியின் டிஜிட்டல் தகவல் அமைப்பு



புகைப்படம் 01

சிரம வசன நிதி ISO தரநிலை சான்றிதழைப் பெறுதல்



TÜV NORD

CERTIFICATE

Management system as per
ISO 9001 : 2015

In accordance with TÜV NORD CERT procedures, it is hereby certified that

SHRAMA VASANA FUND
Ministry of Foreign Relations,
Skills Development & Employment and Labour Relations,
97, Jawatta, Colombo - 00500,
Sri Lanka

applies a management system in line with the above standard for the following scope

Provision of Resources for the Welfare of Sri Lankan Labour Force and their related Parties

Certificate Registration No.**44 100 20392795**
Audit Report No.**2.5-9718/2020**

Valid from **13.02.2020**
Valid until **12.02.2023**

Certification Body
at TÜV NORD CERT GmbH

Mumbai, **13.02.2020**

This certification was conducted in accordance with the TÜV NORD CERT auditing and certification procedures and is subject to regular surveillance audits.

TÜV NORD CERT GmbH Langemarckstrasse 20 45141 Essen www.tuev-nord-cert.com

TUV India Pvt. Ltd., 801, Raheja Plaza – 1, L.B.S. Marg, Ghatkopar (W), Mumbai - 400 086, India www.tuv-nord.com/in

IAF DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-12007-01-00

புகைப்படம் 02

2020 ஆம் ஆண்டில் சிரம வாசனா நிதியத்தின் செயலாற்றுகை

இந்த தொற்றுநோய்க்கு முகம்கொடுக்கையில், 2020 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட செயலாற்றுகையை அடைவதற்கு சிரம வாசனா நிதியத்தால் முடியவில்லை. உலகம் முழுவதையும் பாதித்திருந்த 2020 ஆம் ஆண்டு கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கங்கள் இலங்கையையும் பாதித்திருந்தது.

இது, பிரதானமாக, நாட்டில் போக்குவரத்து மட்டுப்பாடுகளை விதித்தது, குறித்த பிரதேசங்கள் மூடப்பட்டப்பமை மற்றும் சேவைகளின் மாற்று முறை அட்டவணையைப் பின்பற்றி அத்தியவசிய கடமையை ஆற்றியமை போன்ற காரணங்களின் விளைவினால் ஏற்பட்டதாகும்.
இதற்கு மேலும். சிரம வாசனா நிதியத்தின் பல நிகழ்ச்சித்திட்டங்களை, போக்குவரத்து மட்டுப்பாடுகள், நிறுவகத்திற்கு வெளியே தொழிற்சாலைகளின் வளாகங்களில் மற்றும் வேலைத்தலங்களில் அந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகின்ற சந்தர்ப்பத்தில் அந்த மட்டத்திற்கு ஆற்ற முடியவில்லை.

அத்துடன், நிதியத்தின் பிரதான வருவாய் மூலமான லொத்தர் விற்பனை சரிவடைந்தமை காரணமாக சிரம வாசனா நிதியத்தின் வருடாந்த வருவாய் வீழ்ச்சியடைந்திருந்தது. ஆகவே, பணிப்பாளர்கள் சபையின் அறிவுறுத்தலின்படி, 2020 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அத்தகைய சந்தர்ப்பங்களுக்கிடையில், 2020 ஆம் ஆண்டில் இதுவரை சிரம வாசனா நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு.

01. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள


கண்ணோட்டம

சிரம வாசனா நிதியம் தாபிக்கப்பட்டதன் பிரதான குறிக்கோள்களிலொன்று பணியாளர்களின் சேமநலனை மேம்படுத்துவதாகும். இலங்கையில் பல தொழில் விபத்துக்கள் பணியாளர்களின் கவலையீனம் காரணமாகவும், பாதுகாப்பு உபகரணம் பயன்படுத்தாமை காரணமாகவும் ஏற்பட்டுள்ளமை கடந்த சில ஆண்டுகளாக தெளிவாகத் தெரியவந்துள்ளது.

இந்த காரணங்களுக்காக, முற்காப்பு நடவடிக்கையாக விபத்துக்கள் பற்றி அறிவிக்கப்படு கின்ற அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான நிலையிலுள்ள தொழிற்சாலைகள் அண்மைய ஆண்டுகளில் இனங்காணப்பட்டு, அது தொடர்பில் அறிவுள்ள பொறியியலாளர்களால் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும், பிரச்சினைக்குரிய நிலைமைகள் பற்றி பணியாளர்களுக்கும், தொழில்தருநர்களுக்கு மிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் இத்துறையிலுள்ள அனுபவம்வாய்ந்த வள ஆளர்களினூ டாக நடத்தப்பட்டிருந்தன.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றிருந்ததுடன், பணியாளர்களுக்கும், தொழில்தருநர் சமூகத்திற்கும் தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றியும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய, தொழில்சார் விபத்துக்களைக் குறைப்பதற்கான அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் பற்றியும் அறிவூட்டப்பட்டிருந்தது.



வரைபடம் 01













புகைப்படம்: சிரம வாசனா நிதியத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.


02. விபத்தினால் மரணமடைந்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம

கண்ணோட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களால் மரணமடைந்த அல்லது முழுமையாக அங்கவீனமடைந்த உழைக்கும் மக்களின் பிள்ளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பயனாளிகள், குறித்த தொழிற்சாலையில், வேலைத்தளத்தில் அல்லது சேவை நிலையத்தில் இடம்பெறுகின்ற தொழில்சார் விபத்து பற்றி தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்களினூடாகவும், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத் தினூடாகவும் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இனங்காணப்படுவதுடன், மரணமடைந்த அல்லது முழுமையாக அங்கவீனமடைந்த உழைக்கும் மக்களின் பிள்ளைகள் (முற்பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழக கல்வி அல்லது உயர் கல்வி வரை, அதாவது 3-25 வயது வரை) இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தகுதிவாய்ந்தவர்கள் என்பதடன், அத்தகைய பிள்ளைகளுக்கு 50இ000.˙.- நிலையான வைப்பும், கல்விசார் உபகரணங்களும் வழங்கப்படும்.

தற்போது காணப்படுகின்ற தொற்றுநோய் நிலைமை காரணமாக, இந்த ஆண்டில் மரண விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள், மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கம்பஹா, குருணாகல், கண்டி, கேகாலை, நுவரெலியா, பதுளை மற்றும் இரத்தினபுரி பிராந்திய தொழில் அலுவலகங்களில் 2020 யூன் 06,08,09 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டிருந்தன.



வரைபடம் 02












புகைப்படம்: சிரம வாசனா நிதியத்தால் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்.

03. வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம

கண்ணோட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பணியாளர்களின் குடும்பங்களை விசேடமாக, குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களை வலுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருக் கின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்தையும் உள்ளடக்குவதற்கும், வகையில் ஒவ்வொரு வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து உழைக்கும் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்குமாக வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டுதோறும் நடைமுறைப் படுத்தப்படுவதுடன், அவர்களின் தெரிவின்பேரில் ஒரு துறையில் அல்லது அவர்களது பிரதேசத்திற்குப் பொருத்தமானதொரு துறையில் சுய தொழில் வாய்ப்புக்காக அவர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் சொல்லப்பட்ட தொழிற்றுறையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்.



வரைபடம் 03

தற்போது நிலவுகின்ற தொற்றுநோய்க்கு முகம்கொடுக்கையில், 2020 ஆம் ஆண்டில் செயற்கை காலொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், 24 சட்ட உதவி தேவைப்பட்ட தொழிலாளர்களுக்கு சட்ட உதவி வழங்கப்பட்டிருந்தது.







புகைப்படம்: சிரம வாசனா நிதியத்தால் நடத்தப்பட்ட வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்.

Financial Information

Shrama Vasana Fund Statement of Financial Possition as at December 31st, 2020			
Assets		(Rs.)	(Rs.)
Current Assets		**2020**	**2019**
Cash and Cash Equivalents	Note 03	2,104,691.77	3,802,821.01
Inventories	Note 05	1,495,145.07	858,552.69
Fix Deposit		113,000,000.00	95,000,000.00
Receivables	Note 04	336,338,915.56	339,478,950.32
		452,938,752.40	**439,140,324.02**
Non-Current Assets			
Investment		2,774,958.00	2,774,958.00
Intangible Assets	Note 02	22,850.23	28,850.23
Plant Machinary and Equipment	Note 01	12,312,817.53	13,133,340.24
		15,110,625.76	15,937,148.47
Total Assets		**468,049,378.16**	**455,077,472.49**
Liabilities			
Current Liabilities			
Payables	Note 07	159,412.88	132,044.57
Provission	Note 08	1,239,500.00	797,500.00
Non-Current Liabilities			
Staff Gratuity Provission		1,332,566.50	1,151,604.00
Total Liabilities		2,731,479.38	2,081,148.57
Net Assets		**465,317,898.78**	**452,996,323.92**
Accumulated Surpuls	Note 06	461,692,398.78	449,370,823.92
Reserves			
Government grant		3,625,500.00	3,625,500.00
Total net Assets		**465,317,898.78**	**452,996,323.92**

The Accounting Policies and notes on page 35 to 45 from an integral part of this financial statement. The Board Directors of an entry is responsible for the preparation and presentation of these Financial Statements in accordance with the Sri Lanka public sector Accounting Standards (SLPSAs).

These financial statements were approved by the Board of Directors and signed on their behalf.

Chairman, Jude Nilukshan, Shrama Vasana Fund.	Director, B.K.P. Chandrakeerthi, Shrama Vasana Fund.	General Manager, D.R. Jayalath, Shrama Vasana Fund.	Accountant, M.L. Jayamali, Shrama Vasana Fund.

Shrama Vasana Fund Statement of Financial Performance as at December 31st, 2020			
Revenue		(Rs.) **2020**	(Rs.) **2019**
Income	Note 10	37,802,624.87	73,246,457.89
Total Revenue		37,802,624.87	73,246,457.89
Expenses			
Administration Expences	Note 11	14,731,836.98	15,849,845.47
Depreciation	Note 12	2,054,339.30	1,983,224.05
Expenditure for objective of fund	Note 13	8,131,553.92	32,556,007.49
Other Expenditure	Note 14	554,378.00	1,024,642.02
		25,472,108.20	51,413,719.03
Surplus for the year		**12,330,516.67**	**21,832,738.86**

Shrama Vasana Fund Statement of Changes in Funds as at December 31st, 2020		
	(Rs.)	(Rs.)
Balance as at December 31st, 2018	428,530,971.72	428,530,971.72
Prior year adjustment	2,632,613.34	2,632,613.34
Acquistions of vehicle KO 7519-Government grant	(3,500,000.00)	(3,500,000.00)
Acquistions furniture-Government grant	(125,500.00)	(125,500.00)
Surplus for the year	21,832,738.86	21,832,738.86
Balance as at December 31st, 2019	449,370,823.92	449,370,823.92
Prior year adjustment	^8,941.81&	^8,941.81&
Surplus for the year	12,330,516.67	12,330,516.67
Balance as at December 31st, 2020	**461,692,398.78**	**461,692,398.78**

Shrama Vasana Fund Cash flow Statement for the year ended December 31st, 2020			
CASH FLOW FROM OPERATING ACTIVITIES		(Rs.) 2020	(Rs.) 2019
Surplus for the year		12,330,516.67	21,832,738.86
Adjustment			
EPF and ETF arrears		-	(585,673.10)
ETF surcharge		-	(95,489.28)
		12,330,516.67	**21,151,576.48**
Non-cash movements			
Depreciation		2,048,339.30	1,973,103.05
Amortisation		6,000.00	10,121.00
Investment Interest		(7,600,124.14)	(12,889,709.06)
Distress Loan Interest		(44,120.73)	(51,460.44)
Repo investment interest		(23,200.00)	(70,178.39)
Other Income		(100,780.00)	(13,770.00)
Increase/Decrease in working Capital			
(Increase)/Decrease of other payables		27,368.31	(1,058,697.81)
(Increase)/Decrease of provission		622,962.50	228,944.00
(Increase)/Decrease of other receivables	Note 01	(357,266.00)	(30,365,540'00)
(Increase)/Decrease in Inventories		(636,592.38)	1,580,712.14
Net cash flows from operating activities		**6,273,103.53**	(19,504,899.03)
CASH FLOWS FROM INVESTING ACTIVIES			
Purchasing of plant, Machinary & equepment		(1,276,513.40)	(739,938.00)
Investment Interest		11,097,424.30	10,196,967.96
Disaster loan interest		44,120.73	51,460.44
Repo investment interest		23,200.00	70,178.39
Other income		100,780.00	**13,770.00**
Receipt from Property, plant and equepment sale		39,755.00	-
Deposit Postal Machine & Insurance		-	13,535.00
Investment of Web Base & ISO		-	(29,700.00)
Investment Fixed Deposit		(18,000,000.00)	12,000,000.00
Net cash flows from investing activities		**(7,971,233.37)**	**21,576,273.79**
Net increase/(decrease) in cash and cash equivalents		(1,698,129.24)	**2,071,374.76**
Cash and cash equivalants at beginning of period		3,802,821.01	**1,731,446.25**
Cash and cash equivalants at end of period		**2,104,691.77**	**3,802,821.01**

Note 01 : Restated Working capital adjustment Fixed deposit and Other receivable 2019

கணக்கீட்டுக் கொள்கை

1. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 அறிக்கையிடும் அலகு

சிரம வாசனா நிதியமானது, 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தினாலும், 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய (திருத்தச்) சட்டத்தினாலும் கூட்டிணைக்கப்படுகின்றது.

1.2 வழங்குவதற்கு அதிகாரமளித்த திகதி

2020 பெப்ரவரி 21 ஆம் திகதி நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு பணிப்பாளர்கள் சபை அனுமதித்துள்ளது.

1.3 அறிக்கையிடும் காலப்பகுதி

சிரம வாசனா நிதியத்தின் நிதிசார் காலப்பகுதி 2019 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை 12 மாத காலப்பகுதியை பிரதிபலிக்கின்றது.

1.4 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அடிப்படை

1.4.1 நிதிக்கூற்றுக்களின் இணக்கப்பாடு

நிறுவனத்தின் நிதிக்கூற்றானது நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்பு முதலானவற்றைக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (ளுடீளுயுளு) அமைவாக இக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.4.2 அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக்கூற்றானது வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த கணக்குகளைப் பாதிக்கின்ற பணவீக்கக் காரணிகள் கணிக்கப்பட்டிருக்கவில்லை

1.4.3 ஒப்பிட்டுத் தகவல்

நிதிக்கூற்றுக்களிலுள்ள அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பெறுமதிகளும் முன்னைய ஆண்டின்படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது ஆகையால், தரமான, விபரமான தகவல்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுத் தகல்கள் புரிந்துகொள்ளக்கூடியவை என்பதுடன் நடப்பு ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடத்தக்கவை.

ஒப்பீட்டு இலக்கங்கள் தேவையானபோது நடப்பு ஆண்டின் சமர்ப்பிப்பினை உறுதிப் படுத்துவதற்காக மீளாயப்பட்டுள்ளன.

1.4.4 தொழிற்பாட்டிலிருக்கின்ற, கையாளப்படுகின்ற நாணயம

நிதிக்கூற்றானது சிரம வாசனா நிதியத்தின் தொழிற்படு நாணய அலகான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது.

1.4.5 கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள்

தீர்ப்புகள், முடிபுகள் மற்றும் ஊகங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் நிச்சயமற்ற தன்மை காரணமாக, எதிர்கால காலப்பகுதிக்கு முன்கொண்டு செல்லவுள்ள மீதியில் குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டித் தேவைப்படலாம்.

பின்வருகின்ற தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள், சிரம வாசனா நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கின்ற செயன்முறையில் நிதிக்கூற்றுகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டுள்ளன என்று முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிலையான சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள வாழ்க்கைக்காலம்

சொத்தொன்றின் பயனுறுதிவாய்ந்த வாழ்நாள், பெறுமானத்தேய்வின் முறைமையியல் ஆகியன சிறந்த மதிப்பீட்டின் அடிப்படையில் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப் படுகின்றது. ஆகையால் அவை நிச்சயமற்றமற்றவை.
கணக்கு மதிப்பீடுகள் மற்றும் சிக்கலான தீர்ப்புகள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆ) தொடர்ச்சியான இருப்பு

சில மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகள் என்பதுடன், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் சபையால் தொடர்ச்சியாக தொழிற்படுத்தப்படுகின்ற நிதியமானது, சிரம வாசனா நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பில் குறிப்பிடத்தக்க எதுவித இடருக்குள்ளாகும் வாய்ப்பும் இனங்காணப் பட்டிருக்கவில்லை.

நிதிக்கூற்றுக்கள் நிலையானதன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதுடன், கணக்கீட்டுக்கொள்கைகள் காலப்பகுதி முழுவதும் பயனுள்ளதாக இருக்கின்றது.

1.5 சொத்துக்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீட்டு அடிப்படை

1.5.1 சொத்துக்கள், பொறித்தொகுதியும் உபகரணங்களும்

இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நிறுவகத்தின் எதிர்கால பொருளாதார நன்மையின் அடிப்படையில் அமைந்துள்ளதா அல்லது அதன் செலவு ஆதனம் மற்றும் உபகரணம் பற்றிய அரச துறை கணக்கீட்டு நியமங்கள் இல.07 இற்கமைவாக நம்பிக்கையாக அளவிடப்படக்கூடியதா என்பதுவும், அவற்றின் பெறுமானத்தேய்வினை மற்றும் பெறுமானத் தேய்வுடன் தொடர்புடைய சேதங்களையும் மதிப்பிடுதல், அவற்றின் இயலளவினை தீர்மானித்தலும் தேய்மானமிடுதலும், அவற்றுடன் தொடர்புபட்ட சேதங்கள் ஆகியன இனங்காணப்படுகின்றன.
ஆரம்ப நிலையில், ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணங்களும் அதனது செலவில் மதிப்பிடப்படுகின்றன.

ஆ) செலவு

ஆதனம், பொறித்தொகுதியினதும் உபகரணங்களதும் செலவு ஆகியன, கொள்வனவுச் செலவு, உத்தேசிக்கப்பட்டுள்ள அதனது பயன்பாட்டுக்கு மற்றும் செயலாற்றும் மட்டம் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யக்கூடிய ஏதேனும் செலவு என்பற்றை உள்ளடக்ககின்றது.

ஆதனம், பொறித்தொகுதியினதும் உபகரணங்களதும் செலவிலிருந்தான திரட்டிய பெறுமானத்தேய்வினைக் கழித்ததன் பின்னரான செலவு காட்டப்படுகின்றது.

பரிசுகளாகப் பெறப்பட்டுள்ள சொத்துக்கள் திரட்டிய நிதியத்துக்கு வரவுவைக்கப் படுவதுடன், ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணங்களும் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

இ) மீண்டெழும் செலவு

சொத்துக்களைப் பராமரிப்பதற்கு அல்லது உழைக்கும் இயலுமையை அதிகரிக்கும் நோக்கில் நிலையான சொத்துக்களை பெறுதல், விரிவுபடுத்துதல் அல்லது அதிகரிக்கும் நோக்கத்தக்காக உறப்பட்ட தொடர்ச்சியான செலவீனங்கள் மூலதனச் செலவீனமாகக் கருதப்படுகின்றன.

ஈ) பெறுமானத்தேய்வு

காணி தவிர்ந்த ஏனைய சொத்துக்கள் பெறுமானத் தேய்விடப்பட்டபோது, ஆதனம், பொறித்தொகுதியும் உபகரணப் பொருட்கள் ஒவ்வொரு பிரிவின் வாழ்க்கைக்காலம் மீது எளிய நேரியல் முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றன. சொத்து பயன்படுத் தப்படுகின்ற நேரத்திலிருந்து அது அகற்றப்படும் திகதி வரை பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது

பின்வருகின்ற பெறுமானத் தேய்வு வீதங்களில் பெறுமானத் தேய்மானம் தயாரிக்கப்படுகின்றது.

வாகனங்கள்	10மூ
பொறித்தொகுதி	20மூ
காற்றுச்சீராக்கி	20மூ
செவிப்புல-கட்புல உபகரணம்	25மூ
கணனிகள்	25மூ
தளபாடங்களும் பொருத்துக்களும்	10மூ
அலுவலக உபகரணங்கள்	07.5மூ
மென்பொருட்கள்	20மூ

உ) தொட்டுணரமுடியாத சொத்துக்கள்

தொட்டுணரமுடியாத சொத்துக்கள் பணப் பெறுமதியுடனான பௌதிகச் சொத்துக்கள் அல்லாதவையாகும்.

ஊ) இனங்காண்பதன் அடிப்படை

பௌதீக சொத்துக்கள் அல்லாதவை, சொத்தொன்றின் செலவு மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ள பொருளாதார நன்மை அலுவல்களுக்குள் அந்த சொத்துக் களின் ஓட்டத்திலும் பார்க்க அதிகளவு நம்பகமாக மதிப்பிடத்தக்கவையாக இனங்காணப்படுகின்றது.

- கணக்கீட்டு மென்பொருள்

நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் பெறுகைச் செலவை அளவிடுவதுடன், செலவிலிருந்தான திரட்டிய பெறுமானத் தேய்வினைக் கழிக்கின்றது.

எ) தொட்டுணரமுடியாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வு

சொத்தின் பயன்பாட்டுத் திகதியிலிருந்து இலகுவான வழியொன்றில் ஆக்கத்திறன் வாழ்க்கைக்காலம் மீது சொத்தினைப் படிப்படியாக பெறுமானத்தேய்விட்டு வருமானக் கூற்றுக்கு சீராக்கம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஏ) சொத்து மீள்மதிப்பீடு

வாகனம் தவிர்ந்த அனைத்து ஆதனம்,பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களது மீள்மதிப்பீடானது, அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட தொழில்சார்தகுதியுள்ள ஆட்களின் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுகின்றது.(இ.அ.து.க.நி 07).

நிதியத்துக்கு கையளிக்கப்பட்ட முழு 7519 என்ற இலக்கத்தையுடைய கார் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அனைத்து புதிய மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளும் நடப்பு ஆண்டுக்கான நிதிக்கூற்றில் சமர்ப்பிக்கப் படுகின்றன.

i) அகற்றுதல

ஆதனம், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களது தற்போதைய மதிப்பு, அவை விற்கப்படுகின்றபோது அல்லது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால நலன்களுக்கு வழங்கப் படாதபோது அவற்றை அகற்றுவதற்கு இனங்காணப்படுகின்றது. மூலதனப் பொருட்களை அகற்றுகின்றபோது, இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக் கமைவாக (இ.அ.து.க.நி 07) கணக்கிடப்படுகின்றது.

1.5.2 பங்கு

பங்கானது செலவின் அல்லது தேறிய பெறுகை மதிப்பின்படி தெரிவிக்கப்படுகின்றது. பங்கு எடையின் சராசரி விலையில் உத்தரவாதம் மேற்கொள்ளப்படுகின்றது.

1.5.3 பெறக்கூடிய கணக்குகள

பெறக்கூடிய கணக்குகள் என்பவை சேகரிக்கப்படமுடியாத அனைத்து பெறுமதி களுக்குமான அனைத்து விலைப்பட்டியலின் மதிப்பாகும். பெறக்கூடிய கணக்குகள் திறசேரி தொழிற்பாடுகள் மற்றும் நிலையான வைப்புகளிலிருந்து பெறப்பட்ட வட்டிகளை பிரதானமாக கொண்டுள்ளன.

அ) திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறக்கூடிய பணம்

சிரம வசனா நிதிய வருமானத்தின் பிரதான மூலம் 10மு "ஜாதிக சம்பத" லொத்தரிலிருந்து பெறப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் பெறக்கூடிய லொத்தர் வருமானம், லொத்தர் சபையால் திரட்டிய நிதியத்துக்கு வரவு வைக்கப்படுகின்றது என்பதுடன், நிதியத்தின் வருடாந்த தேவைப்பாடுகளின்படி காலாண்டுக்கொருமுறை விநியோகிக்கப்படுகின்றது.

இது, திரட்டிய நிதியத்தில் சிரம வாசனா நிதியம் என்ற பெயரில் நிதியம் பெறவுள்ள தொகையைப் பிரதிபலிக்கின்றது.

ஆ) நிலையான வைப்பு பணப் பெறுகைகள்

சிரம வாசனா நிதியம் என்ற பெயரின் கீழ் நான்கு அரச வங்கிகளில் பேணப்படுகின்ற நிலையான வைப்புக்கள், ஆண்டுக்காக பெறப்பட்டிருக்க வேண்டிய பணமாகும், இருப்பினும் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை.

1.5.4 முதலீடுகள

முதலீடுகள், ஒரு வருடத்திற்கு குறைவான குறுகிய கால முதலீடுகளையும் ஒரு வருடத்திற்கும் அதிகமான நீண்ட கால முதலீடுகளையும் கொண்டுள்ளது. இது. நிலையான வைப்புகளில், மூன்று மாதம், ஆறு மாதம் மற்றும் ஒரு வருடத்திற்கு குறுகிய கால முதலீடுகளையும், அதேபோன்று நீண்ட கால முதலீடுகள் சிரம வாசனா நிதியத்தின் இணையத்தளத்திலும், கணனிமயப்படுத்துள்ள தரவுத்தளத்திலும் மற்றும் சான்றுப்படுத்துதலிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

1.5.5 பணமும் பணத்திற்கு சமனானவையும்

கையிலுள்ள மற்றும் வங்கி வைப்பிலுள்ள பணமும் பணத்திற்குச் சமனானவையையும் கொண்டிருக்கின்றது.

1.6 பொறுப்புக்களும் ஒதுக்கங்களும

ஐந்தொகை தயாரிக்கப்படுவதற்கான அனைத்து வகையான பொறுப்புகளும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், ஐந்தொகையில் காணப்படுகின்ற பொறுப்பு களுக்கு போதுமானளவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் சரியாக மதிப்பிடப்படமுடியவில்லை.

நிதிக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்த ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டி கட்டாயப்படுத்தப்படுகின்ற பொறுப்புகள் நிதிக்கூற்றின் கீழ் நடைமுறைப் பொறுப்புகளாகக் கருதப்படுகின்றன. நிதிக்கூற்றுத் திகதியின் பின்னர் செலுத்த வேண்டிய பொறுப்புகள் நடைமுறையல்லாத பொறுப்புகளாக பேணப்படுகின்றன.

1.6.1 ஓய்வூதிய உதவிப் பொறுப்புகள் மற்றும் எற்பாடுகள்

அ) பணிக்கொடை உதவித் திட்டத்தை வரையறுத்தல்

1983 ஆம் அண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி, சிரம வாசனா நிதியம் பணிக்கொடையைச் செலுத்துவதற்கு பொறுப்புவாய்ந்தது. கணக்கிடப்பட்ட ஒதுக்கங்கள் நிதிக்கூற்றில் காட்டப்படுகின்றன.

ஆ) உதவுதொகைத் திட்டத்துக்கான வரைவிலக்கணம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்.

ஊழியர் சேமலாப நிதி உதவுதொகைகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு உதவுதொகைகள் செலுத்துவதற்கு தகுதியுள்ள அனைத்து பணியாளர்களும், ஏற்புடைய கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக உரிய உதவுதொகை நிதியங் களால் உள்ளடக்கப்படுகின்றன.

பணியாளரின் மொத்த சம்பளத்திலிருந்து 12மூ ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நிதியம் பங்களிப்புச் செய்வதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 3மூ பங்களிப்புச் செய்கின்றது.

இ) சட்ட உதவிக்கான ஒதுக்கீடு

சிரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்களிலொன்று, முதலாவது சட்ட உதவி வழக்கு விசாரிக்கப்படுகின்ற போது வழங்கப்படுகையில், இரண்டாவது தவணை வழக்குக் கட்டளை பெறப்பட்டதன் பேரில் செலுத்தப்படுவதாகும். வழக்குகளுக்காக மேற் கொள்ளப்பட்ட இந்த ஒதுக்கங்கள் ஆண்டு காலப்பகுதியில் இறுதி வடிவத்தை எடுக்கவில்லை.

1.7.1 வருமானம் / வருவாய

பொருளாதார நலன்கள் அல்லது சேவை சாத்தியப்பாட்டின் மொத்த வெளியேற்ற மானது, அறிக்கையிடும் காலப்பகுதியில் வரவுகள் அல்லது நிகரச் சொத்துக்கள் நிறை ஆகியவற்றின் தன்மையில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் வழிவருகின்ற பெறுபேறா கின்றது. வருமானம் மற்றும் வட்டி வருமானம் திரட்டல் அடிப்படையில் கணக்கிடப்படு வதுடன், 'ஜாதிக சம்பத' லொத்தர் மூலமான வருமானம், நிலையான வைப்பிலிருந் தான வட்டி வருமானம் என்பவை பிரதான வருமானங்களாகும்.

1.7.2 செலவினம

பண ஓட்டங்களின் தன்மை அல்லது சொத்துக்களின் நுகர்வின் தன்மை அல்லது பொறுப்புக்களின் தன்மை காரணமாக அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியில் பொருளாதார நன்மைகளில் அல்லது சேவை நம்பகத்தன்மையில் வீழ்ச்சி.

சிரம வாசனா நிதியத்தின் பணியானது, நிதியத்தின் குறிக்கோள்களைப் பேணுவதில் மற்றும் அதனது மூலதன சொத்துக்களைப் பராமரிப்பதில் மூலதனத்தின் தன்மை மற்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பங்கிலாபங்கள் பற்றியதாகும்.

1.8 ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

ஐந்தொகை தயாரிக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிடத்தக்களவிலான நிகழ்வுகள் இடம்பெற்றதைக் கவனத்தில்கொண்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.9 பண ஓட்டக்கூற்று

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக (ளுடீளுயுளு 2) "நேரடியற்ற முறைமை" என்பதைப் பயன்படுத்தி பண ஓட்டக்கூற்று திருத்தப்படுகின்றது.

(Rs.)

Note 01

Plant machinary & equipment

01-01

Cost

	Restated balance as at 01.01.2020	Additions	Desposal/ writeoff/ Adjestment	Balance as at 31.12.2020
Vehical	12,882,500.00	-	-	12,882,500.00
Machinary & Equipment	101,050.00	-	2,000.00	99,050.00
Audio & Video Visual	214,800.00	7,300.00	-	222,100.00
Air Conditioners	180,000.00	-	-	180,000.00
Computers	1,948,525.50	1,103,331.80	45,333.00	3,006,524.30
Furniture and Fittings	629,500.00	127,596.60	5,000.00	752,096.60
Office Equipment	147,112.50	38,285.00	4,000.00	181,397.50
	16,103,488.00	**1,276,513.40**	**56,333.00**	**17,323,668.40**

01-2

Depreciation

	Restated balance as at 01.01.2020	Charge for the period	Desposal/ writeoff/ Adjestment	Balance as at 31.12.2020
Vehical	2,848,040.14	1,288,250.00	-	4,136,290.14
Machinary & Equipment	3,875.90	19,971.75	239.56	23,608.09
Audio & Video Visual	10,298.63	54,123.84	-	64,422.47
Air Conditioners	6,904.11	36,000.00	-	42,904.11
Computers	86,779.97	568,664.82	6,793.03	648,651.76
Furniture and Fittings	12,072.60	67,812.39	423.72	79,461.27
Office Equipment	2,176.41	13,516.50	179.88	15,513.03
	2,970,147.76	**2,048,339.30**	**7,636.19**	**5,010,850.87**

Note 02
Intangible Asset

	Cost as at 2020.01.01	Additions	Desposal/ writeoff/ Adjestment	Balance as at 31.12.2020
Software	1,149.77	6,000.00	-	7,149.77
	1,149.77	6,000.00	-	7,149.77

Note 03
Cash and Cash Equivalents

Peoples Bank-119100103693128	2,094,691.77
Peoples Bank-119100293693128	10,000.00
	2,104,691.77

(Rs.)

Note 04 **Other Receivables**	
Treasary Operation Department	332,140,520.18
Festival Advance	10,000.00
Distress Loan	1,490,866.00
Interest on Fixed Deposit Investment	2,694,529.38
Refundable deposit	3,000.00
	336,338,915.56
Note 05 **Inventories**	
Stationary	642,406.04
Programe Item	852,739.03
	1,495,145.07
Inventories has been measurement on Weighted Average Cost	
Note 06	
Cumulative Fund as at 01.01.2020	449,361,882.11
Surplus for the year 2020	12,330,516.67
Cumulative Fund as at 31.12.2020	**461,692,398.78**
Note 07 **Other Payable**	
Telephone Payable	27,282.37
Other Payable	130,453.78
Water and Electricity Payable	1,676.73
	159,412.88
Note 08 **Provission**	
Provission for Legal Aid	687,000.00
Provission Financial assistance Arbitration	20,000.00
Provission for Legal Assistance appeaps	-
Provission for Web Based System	32,500.00
Provission for Audit Fee	500,000.00
	1,239,500.00

(Rs.)

Note 09 Fixed Assets has been depreciated on Straight line basis	
Vehical	10%
Machinary & Equipment	20%
Air Conditioners	20%
Audio & Video Visual	25%
Computers	25%
Furniture and Fittings	10%
Office Equipment	7.50%
Software	20%
Depreciable value of final assets have been depreciated up to scrap value Rs.1	
Note 10 **Income**	
Shrama Vasana Lottery Income	30,034,400.00
Fixed Deposit Investment Income	7,600,124.14
Distress Loan Interest Income	44,120.73
Repo Investment Income	23,200.00
Other Income	100,780.00
	37,802,624.87

(Rs.)

Note 11 Administrative Expenditure	
Salary and wages	6,762,442.11
EPF	1,751,155.80
ETF	262,673.37
Cost of Living Allowance	1,497,600.00
Other Allowance	230,160.00
Chairman Allowance	207,725.00
Practical Trainee Allowance	42,096.77
Directors Allowance	326,470.00
Board Secreatary Allowance	15,000.00
Allowance for Internal Auditor	30,000.00
Professional Allowance	180,000.00
Staff Gratuity	180,962.50
Overtime & Holiday Pay	155,445.72
Domestic Travelling & Sub	66,915.19
Transport Charges	276,282.00
Stationery & Others	430,608.17
Postal Expenses	24,660.00
Telephone Expenses	290,708.81
Entertainment Expenses	32,347.90
Refreshment & Others	130,409.25
Sundry	12,542.50
Others	21,371.00
Audit Expenses	300,000.00
Water & Electricity	39,472.61
Other Service	337,053.38
Maintance & Rapair Expence	647,234.90
Staff Welfare	204,000.00
Training Staff	276,500.00
	14,731,836.98
Note 12 Depreciation	
Depreciation on Vehicle	1,288,250.00
Depreciation on Computers	568,664.82
Depreciation on Air Conditioners	36,000.00
Depreciation on Audio & Video Visual	54,123.84
Depreciation on Furniture and Fittings	67,812.39
Depreciation on Office Equipment	13,516.50
Depreciation on Machinary & Equipment	19,971.75
Amortisation on Software	6,000.00
	2,054,339.30

(Rs.)

Note 13 **Expenditure to achive targets of the fund**	
Empowerment Programme	1,537,772.17
Awarness Programme	338,070.00
Welfare Programme	563,834.68
Artificial Legs & Limbs Programme	46,500.00
Legal Aid Programme	654,005.04
Legal Assistance for appeals	30,000.00
Scholarship programme	4,961,372.03
	8,131,553.92
Note 14 **Other Expenditure**	
Lottery Sale Public Awarness	336,119.00
ISO Review	218,259.00
	554,378.00
Note 15 **Prior year adjustment**	
Assets sales loss	(8,941.81)
	(8,941.81)
15.1	
Transfer of car number KO 7519 and Furiture assigned by the Department and Ministry of Labour to the State Reserve Account from the Cumulative Fund	
Note 16	
People's Bank Narahenpita Branch maintains two current accounts under the name of Chairman Shrama Vasana Fund. Current Account No. 119100293693128 has been opened for a Electronic card as a debit card to be replenished with Rs. 10,000.00	
Note 17 **Comparative Information**	
Prior years figures have been restated where necessary to confirm to the current year's presentation.	
Note 18 **Directors Interests in Contracts**	
No Director of the Board has any material direct or indirect interest in the contracts of the Board.	
Note 19 **Directors Responsibility**	
The Directors take responsibility for the Preparation and Presentation of Financial Statements.	

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. LEW/A/SVF/6/2020/3 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 30 June 2021

தவிசாளர்
சிரம வாசனா நிதியம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு நியதிகளின்படி, 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகுதியுள்ள கருத்துரைகள்

2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்குரிய சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுஇ 2020 திசெம்பர் 31 இலுள்ளவாறான விரிவான நிதிச் செயலாற்றுகைக் கூற்றினைத் தொகுத்திருப்புதுடன், நிதிச் செயலாற்றுகைக் கூற்று, நிகரப்பங்கு மாற்றக் கூற்று, நிதி ஓட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கையின் பொழிப்பு உள்ளடங்கலாக முடிவுற்ற அந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக் குறிப்புகள், 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. எனது அறிக்கை, அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள், 2020 டிசெம்பர் 31 இல் நிதியத்தின் நிதி நிலைமை உண்மையான, நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பதுடன், அத்திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதிசார் செயலாற்றுகைகள் மற்றும் பண ஓட்டம் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியதிகளின்படியானது என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 தகுதியுள்ள கருத்துரைகளுக்கான அடிப்படை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ). ஆய்வாண்டு காலப்பகுதிக்கான நிலையான வைப்பு வட்டி வீதம், நிதிக் கூற்றில் 7,600,124, ரூபாவாக காட்டப்பட்டுள்ள போதிலும், அட்வணையின்படி வட்டி வருமானம், 8இ591இ293 ரூபாவாகும். இதன்படி, ஆய்வாண்டு காலப்பகுதியில் அட்வணைகளுக்கும் நிதிக் கூற்றுக்களுக்குமிடையில் நிலையான வைப்பு வட்டி வருமானத்தில் 991,169 ரூபா வேறுபாடு காணப்படுகின்றது.

(ஆ). ஆய்வாண்டு காலப்பகுதியில் முதலீடு செய்யப்பட்டிருந்த 05 மில்லியன் ரூபா நிலையான வைப்பு மீதான வட்டி நிலுவை தவறான கணிப்பு காரணமாக மேலதிகமாகக் காட்டுள்ளது.

(இ) 2020 டிசெம்பர் 31 இலுள்ளவாறு அரச மானியமாக நிதியத்திற்கு மாற்றப்பட்ட 3,625,500 ரூபா நிலையான சொத்து மற்றும் நிதியத்தால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் உள்ளடங்கலாக, 2,774,958 ரூபா செலவுடன் தயாரிக்கப்பட்டிருந்த இணையத்தள முறைமை என்றழைக் கப்படுகின்ற கணனி மென்பொருள் தொடர்பில் இனங்காணப்பட்ட விகிதாசாரம் மீதான பெறுமானத்தேய்வுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனது கணக்காய்வினை நான் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக நடத்தியுள்ளேன். ஆந்த நியமங்களுக்குக் கீழ் எனது பொறுப்பகள், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுப் பிரிவுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பில் மேலும் விதித்துரைக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவையென்றும். எனது தகைமையுள்ள கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு பொருத்தமானவையென்றும் நான் நம்புகின்றேன்.

1.3 முகாமைத்துவத்தின் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களுக்கான ஆளுகைக்குப் பொறுப்பானவர்களும்

இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக உண்மையை, நியாயத்தை வழங்குகின்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பொறுப்பினை முகாமைத்துவம் கொண்டிருக்கின்றது என்பதுடன், முகாமைத்துவம் என்ற வகையில், அத்தகைய அகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது மோசடி அல்லது தவறுகளினால் ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறுகளற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலச்செய்வதும் அத்தியவசியமானதாகும்.

நிதிக்கூற்றக்களைத் தயாரிக்கின்றபோது, நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பிற்கான இயலுமையைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பென்பதுடன், கணக்கு களை முறையாகப் பேணி, முகாமைத்துவம் எப்போது நிறுவகத்தின் திரவத் தன்மையை தீர்மானிப்பது அல்லது வேறு மாற்று வழியில்லாதபோது நிறுவகத்தின் செயற்பாடுகளை நிறுத்துவது என்பவை தவிர்ந்த நிறுவகத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துத்தின் பொறுப்பேயாகும்.

ஆளுகைக்குப் பொறுப்பான தரப்புக்கள், நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பு வாய்ந்தவையாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உட்பிரிவின்படி, நிதியம், அதன் வருடாந்த மற்றும் காலாந்தர நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அதன் வருவாய், சொவீனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தத்தில், எனது குறிக்கோள், இந்த நிதிக்கூற்றுக்கள், பொருட்படுத்தக்கூடிய மோசடி, தவறுகளை கொண்டிருக்கக்கூடிய பொருட்படுத்தத்தக்க பிழைகள் அற்றவை என்ற நியாயமான உத்தரவாதத்தை முன்வைப்பதும், எனது கருத்துடன்கூடிய கணக்காய்வு அறிக்கையொன்றினை வழங்குவதுமாகும். இந்த நியாயமான உத்தரவாதம் உயர்ந்த பட்சமானதாக இருக்கின்றபோதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவான கணக்காய்வொன்றினை மேற்கொள்கின்றபோது பொருட் படுத்தத்தக்க தவறான கூற்றுக்களை அது எப்போதும் வெளிப்படுத்தும் என்ற உத்தரவாதமாகாது. பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்கள் என்பது, தனித்த அல்லது கூட்டான மோசடி மற்றும் தவறுகளின் பாதிப்புகளால் ஏற்படுத்தப்பட முடியும் என்பதுடன், இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளால் மேற்கொள்ளப் பட்ட தீர்மானங்கள் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக, தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் இணக்கப்பாட்டுடன் நான் இந்தக் கணக்காய்வினை மேற் கொண்டுள்ளேன். மேலும்,

- எனது கருத்து, மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களின் ஆபத்தை இனங்காண்கின்ற மற்றும் மதிப்பிடுகின்ற போது, சூழ்நிலைக்குப் பொருந்தத் தக்க உரிய கணக்காய்வு நடைமுறைகளைப் பயன்படுத்தி மோசடிகள் மற்றும் பிழைகளினால் ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்ப்பதற்கு போதிய, உரிய கணக்காய்வு சான்றுகளைப் பெறுவதன் அடிப்படையிலமைந்ததாகும். மோசடியின் தாக்கம் பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றொன்றினால் ஏற்படுகின்ற ஆபத்திலும் பார்க்க பலமானதாகும் என்பதுடன், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது அகக் கட்டுப்பாட்டினைத் தவிர்த்தல் என்பவை தவறான நடத்தை மற்றும் மோசடி, இட்டுச்செல்கின்றன.

- நிறுவனத்தின் அகக் கட்டுப்பாடு, சூழ்நிழலைக்குப் பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைமுறைகளை வடிவமைப்பதற்கு பெறப்பட்டுள்ளமை தொடர்பில் புரிந்துணர் வொன்று இருந்தபோதிலும், அகக்கட்டுப்பாட்டின் பயனுறுதி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் உத்தேசமில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை அத்துடன் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட உரிய வெளிப்படுத்தல்களின் பொருத்தமாந்தன்மையை மதிப்பிடுதல்.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக நிறுவகத்தின் இருப்பு பற்றி போதிய நிச்சயமின்மை உள்ளது என்ற கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுள்ளதன் அடிப்படையில், நிறுவனம் தொடர்ந்து கணக்கெடுக்க வேண்டுமென்ற அடிப்படையைப் பயன்படுத்துவது குறித்து முடிபெடுக்கப் பட்டுள்ளது. அடிப்படையாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பினைப் பயன்படுத்துவதற்கான பொருத்தப்பாடு பொருட்படுத் தத்தக்க நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதென்று நான் முடிவுறுத்தினால், அவை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டவை தொடர்பில் எனது அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அந்த வெளிப்பாடுகள் போதுமானவை யில்லையென்றால், எனது கருத்துரை திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு எதிர்கால சம்பவங்கள் அல்லது காரணிகள் காரணமாக முடிவுற முடியும்.

- முன்வைப்பு கட்டமைப்பு முறையை மற்றும் வெளிப்பாடுகளைக் கொண்டிருக் கின்ற நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் அத்துடன் நிகழ்வுகள் அவை நிதிக்கூற்றுக்களில் உரிய முறையிலும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

முக்கியமான கணக்காய்வு காண்பிப்புகள், பிரதான அகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட ஏனைய விடயங்கள் ஆளும் தரப்பினர்களுக்கு புரிந்துகொள்ளச் செய்யப்பட்டுள்ளன.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், பின்வருகின்ற தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையின் பகுதியான தகுதியுள்ள கருத்துரைகளுக்கு என்ற அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் விபரங்களையும் நான் பெற்றுள்ளதுடன், எனது விசாரணையில் பார்த்தவாறு நிறுவகம் உரிய பதிவுகளைப் பேணியுள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (வை) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, நிறுவனத்தால் அனுப்பப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்ததாக இருந்தது.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறைகள், பெறப்பட்ட சான்றுகளுடன் மற்றும் பொருட்படுத்தத் தக்க விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட வரையறைக்குள் பின்வருகின்ற கூற்றுக்களைத் தெரிவிப்பதைத் தவிர வேறு எதுவும் எனது அவதானத்திற்கு வரவில்லை:

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின்படி, நிறுவகத்தின் ஆளுங் குழுவின் உறுப்பினர் எவரேனும், நேரடியாக அல்லது நிறுவகத்தின் ஏதேனும் ஒப்பந்தத்துடன் அல்லது தொழிலின் சாதாரண அலுவல்கள் என்ற நிலைக்கு அப்பால் நடந்து கொள்வதில் தொடர்புபட்டுள்ளனர்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின்படி, நிறுவகத்தின் ஆளும் சபையினால் வழங்கப்பட்ட ஏற்புடையதான உரிய எழுத்துருவிலான சட்டம் அல்லது பிற வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காது நிறுவகம் செயற்பட்டுள்ளது.

சட்டங்கள்,ஒழுங்குகள், ஒழுங்குவிதிகளுடன் தொடர்புபட்டவை	விளக்கம்
(அ). 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச்சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச்சட்டம்	
(i). உப பிரிவு 3:4: (2)	தொழில் ஆணையாளர் அதிபதி, தொழில் நியாய சபை, நடுத்தீர்ப்பாளரொருவர் அல்லது தொழில்நீதிமன்றம் அல்லது பிற வேறு நீதிமன்றம் முன்பாக ஏதேனும் எழுத்து மூலமான சட்ட ஏற்பாடுகளின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது முயற்சிக்கப்படு கின்ற பணியாளரொருவரின் தொழில் முடிவுறுத்தலுடன் தொடர்புபட்டுள்ள வழக் கொன்றுக்காக, பணியாளருக்கான சட்ட உதவிகள் மற்றும் நிதி நிவாரணங்களை வழங்குவதன்பேரில் சபையால் குறிப்பிடப்பட்ட தொரு தொகை சட்ட நோக்கத்திற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாக இருத்தல் வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும், இந்த சட்ட உதவியை வழங்குவதற்கான விதிகள் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii). உப பிரிவு 13:1 மற்றும் 13:2(அ)	நிதியத்தால் மற்றும் லொத்தர் சபையால் இணங்கக்கூடியவாறான லொத்தர் களின் எண்ணிக்கை, லொத்தர்களின் வகைகள் மற்றும் அத்தகைய லொத்தர்களின் கோரப் படாத பரிசில்களை எவ்வாறு கையாள்வது அத்துடன் லொத்தர் செயல்முறையிலிருந்து நிதியத்திற்கு ஒதுக்கப்படவுள்ள பணத் தொகை தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக் கப்படுதல் வேண்டும் என்றபோதிலும், நிதியம் மற்றும் தேசிய லொத்தர் சபை, அத்தகைய ஏற்பாட்டுடன் உடன்பாடொன்றை அடைந் திருக்கவில்லை.

	(iii). உப பிரிவு 14:1	சபையின் தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் பணிஇலக்கு அல்லது நிதி அமைச்சுடன்கூடிய விளைவு காரணிகளுடன் தொடர்புபட்டுள்ள விடயங்களுக்க அத்திய வசியமானதென்று சபை கருதுகின்ற விதிகளை சபை தயாரித்து, சமர்ப்பித்துள்ள போதிலும், 2021 ஏப்பிரல் 08 ஆம் திகதி வரை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.
(ஆ)	**2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வாளர் சட்டத்தின் பிரிவு 16:2**	பிரதம கணக்கீட்டு அலுவலர் ஆண்டு செயலாற்றுகை அறிக்கைகளுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் அதிபதி சமர்ப்பித்தல் வேண்டும் என்ற போதிலும், நிதிக் கூற்றுக்களுடன் கூடிய செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வாளர் சட்டத்தின் பிரிவு 12 (எ) யின் தேவைப்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் இணங்காத வகையில் நிதியம் செயற்பட்டுள்ளது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வாளர் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) யின் தேவைப்பாடுகளுக்கமைவாக, நிதியத்தின் வளங்கள் பெறப் பட்டிருக்கவில்லை என்பதுடன், சரியான விதத்தில் பயனுறுதியாகவும், வினைத் திறனுடனும் உரிய ஒழுங்குவிதிகளுக்கமைவாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை

(அ). நிதியத்தின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்காக பேணப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள வங்கி நிலுவைவையையும், குறுகிய காலத்தில் மேலதிக பணத்தை முதலீடு செய்கின்ற முறைமையை இனங்காண்பதற்கு தவறியமை காரணமாக, ஆய்வாண்டின் ஒவ்வொரு மாத இறுதியிலும் நடைமுறைக்கணக்கில் 2 மில்லியன் ரூபாவிலிருந்து 14 மில்லியன் ரூபா வரை நிலுவையிலிருந்துள்ளது. இதன் விளைவாக, நிதியமானது, உழைத் திருக்கக்கூடிய வட்டி வருவாயை இழந்துள்ளது.

(ஆ). ஆய்வாண்டு காலப்பகுதியில் மூன்று அரச வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள 95,000,000 ரூபா நிலையான வைப்புகள் முதிர்ச்சி யடைந்திருந்ததுடன், வட்டிவீதங்களை ஒப்பிட்டு மிகவும் இலாபகரமான முதலீட்டுத் தெரிவில் மீள முதலீடு செய்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ). கோவிட்-19 காரணமாக தமது தொழில்களை இழந்த பணியாளர்களின் பிள்ளைகள் 2500 பேருக்கு பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் உபகரணங்களை விநியோகிப்பதற்காக 6,250,000 ரூபா மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தொழில் ஆணையாளர் அதிபதி, 11 தொழில் விடயப்பரப்புகளை உள்ளடக்கி தேவையான தகவல்களையும், விண்ணப் பங்களையும் கோரியுள்ளதுடன், 2020 டிசெம்பர் 31 இல் 330 விண்ணப் பங்களுக்குமதிமாக பெறப்பட்டிருந்தன. அந்த சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவது அவசர தேவையொன்று என்பதுடன், சொல்லப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் உப பிரிவு 6(உ) இனது நோங்கங்களுக்கு மிகவும் பொருத்தமானது என்ற போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டம், 2021 மார்ச் 15 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ). பணியாளர்களது நலன்புரிக்காக சிறந்த சேவையை வழங்கியுள்ள தனிநபர் களுக்கு பாராட்டு வைபவமொன்றை நிகழ்த்துவதற்கு 2017 ஓகஸ்ட் 15 ஆம் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், உரிய குழுவின் அறிக்கை 06 மாதங்கள் காலதாமதமாகியிருந்தன. பணிப்பாளர்கள் சபையின் முன்னுரிமை தீர்மானமாக 03 தொழில்தருநர்கள், 4 பணியாளர்கள் மற்றும் 3 அரச பிரதிநிதிகள் என்பதாக மூன்று தரப்புக் களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு 10 நபர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நியமிக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்பட்ட வாறு பத்திரிகை விளம்பரங்களினூடாக 35 வருடங்களுக்கும் மேலாக தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நீண்டகாலம் சேவையாற்றிய 10 தனிநபர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். முன் வீடியோ பதிவு, பத்திரிகை விளம்பரங்கள், 2020 டிசெம்பர் 31 வரை குழு உறுப்புரிமை கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக ஆரம்ப செலவுகளுக்காக 708,897 ரூபா செலவுறப்பட்டிருந்த போதிலும், 2021 மார்ச் 15 ஆம் திகதி வரை வைபவம் நடத்தப்படவில்லை.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ). 2020 ஆம் ஆண்டுக்கான அகக் கணக்காய்வுத் திட்டமொன்று மட்டும் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அகக் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அறிக்கைகளும் வழங்கப்படவில்லை. மேலும், நிதியத்தின் அகக் கணக்காய்வாளர் பதவி 2020 மார்ச் மாதத்தின் பின்னர் வெற்றிட மாகியிருந்தது.

(ஆ). 2016 ஆம் ஆண்டுக்க முன்னர் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 60,464 ரூபா பெறுமதியான உபகரணங்களின் 10 தொகுதிப் பொருட்கள் 2020 டிசெம்பர் 31 வரை அகற்றப்படமுடியாத தொகுதிப் பொருட்களாக களஞ்சியத்தில் எஞ்சிக் காணப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

பணிப்பாளர்கள் சபையின் மீளாய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வச் சட்டத்தின் 12 ஆம் இலக்க நியதிகளில் 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான சிரம வாசனா நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய ஒழுக்காற்று தேவைப்பாடுள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1.2

(அ) முன்னைய ஆண்டுக்குச் செய்யப்பட்ட சீராக்கல்கள் எதிர்கால கணக்குக் கூற்றுக்களில் சரியாக குறிப்பிடுவதற்கு அவதானிக்கப்படுகின்றது.

(ஆ) குறைபாடுகள் திருத்தப்படும் என்பதுடன், 2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் குறைபாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) கணக்குக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட விகிதத்தில் அரச மானியங்களைத் திரட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில், இணையத்தை அடிப்படையாகக்கொண்ட முறைமை முதலீட்டிலிருந்து அகற்றப்பட்டு, தொட்டுணரமுடியாத சொத்துக்களாக கணக்கிடப்படவுள்ளதுடன், குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குள் பெறுமானத் தேய்விடப்படும். மேலதிக வெளிப்படுத்தல்கள், கணக்குக் கூற்றுக்களில் மேற்கொள்ளப் படும்.

2.2.2(அ)

I 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க தொழில் நலன்புரி நிதிய திருத்தச் சட்டத்திற்கு ஏற்புடையதான 5 (2அ) ஆம் பிரிவு நியதிகளில் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு நியதிகளில் தயாரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கான வரைபு, வர்த்தமானியில் (1.5.அ.i.ii) பிரசுரிக்கப்படுவதற்காக, பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கணக்காய்வு கேள்விகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, உரிய விதிகள், 2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க தொழில் நலன்புரி சட்டத்தின் பிரிவு 3(3) இல் மற்றும் 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்தின் 3(3)எ(னை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளின் தொகுப்புடன், வர்த்தமானியில் பிரசுரிப் பதனைக் கவனத்தில்கொள்வதற்காக நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி, அத்தகைய பணி இலக்கு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படவுள்ளது.

II 2017 ஆம் ஆண்டிலிருந்தான லொத்தர் சபையுடன் செய்துகொள்ளப்படவுள்ள ஒப்பந்தத்தின் வரைபு நிதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் உரிய திகதியில் 2017 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் நிதி அமைச்சுக்கு அறிவிக்கப் பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் இதுவரை இணங்கவில்லை. இருப்பினும், எதிர்காலத்தில் இது பற்றி கலந்துரையாடுவதற்கு வாய்ப்புத் தரப்படும் என்று வாய் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

III இதனை விரைவுபடுத்தி வர்த்தமானியில் பிரசுரிப்பது தொடர்பாக நிதி அமைச்சுக்கு 2021.08.03 ஆம் திகதியிடப்பட்ட நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ)

நிதிக்கூற்றுக்களுடன் இணைத்து செயலாற்றுகை அறிக்கையை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதுடன், 2020 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கும் மற்றும் நிதி அமைச்சுக்கும் 2021.08.31 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(அ) **2.2.4**

பணப் புத்தக வங்கிக் கணக்கு நிலுவை 5 மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற போது மக்கள் வங்கி திறைசேரி அலகில் சுறீழு ஆக குறுகிய கால முதலீடுகளிலுள்ள வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அது, 5 மில்லியன் ரூபாவை விட குறைவாக இருக்கின்றபோது, கேள்வி வைப்புகளில் முதலிட்டு வட்டியை உழைப்பதற்கும் 2021.04.20 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபையால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வங்கிக் கணக்கு நிலுவை 5 மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற போது சுறீழு வில் முதலிடு வதற்கும், நடைமுறை நிலுவை 5 மில்லியன் ரூபாவை விட குறைவாக இருக்கின்றபோது கேள்வி வைப்புகள் போன்ற அத்தகைய குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2021.08.21 ஆம் திகதி மக்கள் வங்கியில் கேள்வி வைப்புகளாக முதலீடு செய்வதன் மூலம் வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) PED 2/2018 சுற்றறிக்கையின்படி, வட்டி வீதங்கள் அரச வங்கிகளிலிருந்து கோரப்படும் என்பதுடன், அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தன் பின்னர் உயர் வட்டி வீதங்களை வழங்குகின்ற அரச வங்கிகளில் அவை முதலிடப்படும். வங்கிகள் மூடப் பட்டிருக்கின்ற, நாட்டில் தொற்றுநோய் நிலைமை காரணமாக வங்கி அலுவலர்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற அத்தகைய சந்தர்ப்பங்களில், ஆகக்குறைந்தது ஒரு நாளேனும் நிறுவனத்திற்கு வட்டி இழப்பு ஏற்படாது, அதே வங்கியில் முதலிடுவதற்கு பணிப்பாளர்கள் சபையின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இதன்படி, அத்தருணத்தில் உயர் வட்டியைக் கொண்டிருந்த மக்கள் வங்கியிலேயே முதலிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருப்பினும், வெளிப்படைத் தன்மையைப் பேணும் நோக்கில், 2021 ஆம் ஆண்டில் அரச வங்கிகளிடமிருந்து வட்டி வீதங்களைக் கோருவதற்கும், உயர் வட்டி வீதங்களுடன் வங்கிகளில் முதலிடுவதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) கோவிட்-19 காரணமாக பாடசாலைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கையில், பாடசாலை உபகரணங்களை வழங்குவது நடைமுறைச்சாத்தியமில்லை. ஆகையால் பணிப்பாளர்கள் சபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நாட்டில் கோவிட்-19 தொற்று காரணமாக இந்த ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பிரச்சினைகள் எழுந்திருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வருடாந்த செயற்றிட்டத்தினூடாக செலவினம் ஒதுக்கப்பட வேண்டியிருந்ததுடன், உரிய மதிப்பீடு மீளாயப்பட்டு அனுமதி பெறப்பட்டிருந்தது. வைபவத்தை நடத்துவதற்கான இயலாமையின்மை காரணமாக, இந்த நிகழ்வை, கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையின் கீழ் 2021 செப்ரெம்பர் 29 ஆம் திகதி நடத்துவதற்கு அட்வணைப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்திற்கு நாட்டின் சூழல் பொருத்தமற்றிருந்தமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களின்படி அத்தகைய விடயங்களுக்கான வாய்ப்பின்மை காரணமாக மேலும் பிற்போட வேண்டியிருந்தது. இந்த நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கு எதிர்காலத்தில்

சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றபோது, அதனை மீண்டும் பணிப்பாளர் சபையின் கவனத் திற்குக் கொண்டுவந்து, இது தொடர்பில் முறையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் தகுதி பற்றி மீளாய்வதற்கு தொழில் அமைச்சின் தற்போதைய செயலாளரின் வழிகாட்டலின் கீழ், பணிப்பாளர்கள் சபையின் அனுமதியுடன் நியமிக்கப்பட்ட குழுவொன்று பயனாளிகளின் பட்டியலை மீள் பரிசீலனை செய்திருந்த துடன், பணிப்பாளர்கள் சபையின் அனுமதிக்கான வகைப்பாட்டுடன் இணங்குவதற்கான பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

கணக்காய்வால் வினவப்பட்ட விடயங்கள், பணிப்பாளர்கள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், தொழில் தலைவர்களுக்காக அந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு பணிப்பாளர்கள் சபையினால் மீள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக சிரம வாசனா நிதியத்தின் பணிப்பாளர்கள் சபையினால் 03 அலுவலர்களைக் கொண்டிருக்கின்ற குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இக் குழுவின் பரிந்துரையின்பேரில், தொழில் சங்கத் தலைவர்களை மதிப்பிடுவதற்கு பணிப்பாளர்கள் சபையும் தீர்மானித்திருந்தது. இதன்படி, அத்தரப்பினால் பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2018.03.22 அன்று பணிப்பாளர்கள் சபையால் கூடிய 10 புள்ளிகளைப் பெற்றவர்கள் அங்கீகரிக்கப் பட்டிருந்தனர். கௌரவ தொழில் அமைச்சரின் வீசேட வேண்டுகோளின்பேரில் தெரிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் 2018.07.24 ஆம் திகதி பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். இந்த தெரிவு முறைமையின் வெளிப்படைத் தன்மையை மீள் பரிசீலனை செய்வதற்காக தற்போதைய தொழில் அமைச்சரின் வேண்டு கோளின்பேரில், தொழில் அமைச்சின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப் பட்டிருந்ததுடன், 2021/01/10 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த செலவீனங்கள், மதிப்பிடப்படவுள்ள பயனாளிகளின் விபரங்களைக் கொண்டிருக் கின்ற வீடியோவுக்காக உறப்பட்டதுடன், இது எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட முடியுமென்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன், இந்த நிகழ்ச்சித்திட்டம் கௌரவ பிரதம அமைச்சரால் தரப்படுகின்ற திகதியொன்றில் சுகாதார வழிகாட்டல் களைப் பின்பற்றி எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

2.3

(அ) அகக் கணக்காளரொருவரை நியமிப்பது தொடர்பான 2021.10.04 ஆம் திகதி யிடப்பட்ட கடிதம், நிதி அமைச்சினால் சிரம வாசன நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்தக் கையிருப்பிலுள்ள குறித்த பொருட்கள், 2021.10.18 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தால் தேசிய லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள சில பொருட்கள், சுகாதார வழிகாட்டல்கள் இலகுபடுத்தப்பட்டவுடன் எதிர்கால புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.



සුදී නිලුක්ෂාන්
සභාපති
ශ්‍රම වාසනා අරමුදල

பின்னிணைப்பு

சிரம வாசனா நிதியத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

01. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

- 2020 பெப்ரவரி 17 மற்றும் 18
  - பிட்டரத்மலை தேயிலை தொழிற்சாலை
  - சம்மர் பஷன் நிறுவகம்
  - தம்பேதென்ன தேயிலை தொழிற்சாலை
  - கபுத்தளை பெருந்தோட்ட தேயிலை தொழிற்சாலை
  - தொழில் அலுவலகம்-ஹப்புத்தளை
  - புடநழெசந ளுவயவந - லஅங்கஇய
- திறந்த பல்கலைக்கழகம்-நாவல - 2020 பெப்ரவரி 27
- வர்த்தக முதலீட்டு வலயம்-கொக்கல்ல - 2020 மார்ச் 06
- ஹய்லண்ட் தொழிற்சாலை - அம்பேவல-2020 மார்ச் 06 மற்றும் 07
- மனிதவலு திணைக்களம்-2020 மார்ச் 06 மற்றும் 07
- தொழில் திணைக்களம்,10 ஆவது தளம், 2020 யூலை 21

02. மரண விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்

- 2020 யூன் 06இ08இ09 மற்றும் 10 ஆம் திகதிகளில
  - தொழில் அலுவலகம் - மாத்தறை
  - தொழில் அலுவலகம் - அம்பாந்தோட்டை
  - தொழில் அலுவலகம் - களுத்துறை
  - தொழில் அலுவலகம் - கம்பஹா
  - தொழில் அலுவலகம் - குருணாகல
  - தொழில் அலுவலகம் - கண்டி
  - தொழில் அலுவலகம் - கேகாலை
  - தொழில் அலுவலகம் - நுவரெலியா
  - தொழில் அலுவலகம் - பதுளை
  - தொழில் அலுவலகம் - இரத்மலானை. மெமாத்தச் செலவு 2,891,705.00 ரூபா.

03. வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

- பிரதேச செயலகம், மன்னார்-2020 பெப்ரவரி 14.
- பிரதேச செயலகம், மிலானியா-2020 பெப்ரவரி 20.
- பிரதேச செயலகம், புளத்சிங்கள-2020 பெப்ரவரி 13.
- பிரதேச செயலகம், திஸ்ஸமகராம-2020 பெப்ரவரி 18.